www.padippakam.com

□□

# மலைகளையே பிளந்திட்டோம்!

□□

தெலுங்கு மூலம்:

## செரபண்டராஜு

ஆங்கிலம் வழி தமிழில்:
கலைச் செல்வன்
கோ. சடை

இந்திய
விவசாயப் புரட்சியில்
தங்கள் இன்னுயிர் ஈந்த
தியாகிகளின் நினைவாக

படிப்பகம்

www.padippakam.com

தொடர்பு முகவரி:-

"SAMAR"
87 , RUE DE COLOMBES
92600 - ASNIERES SUR SEINE
FRANCE.

பணம் அனுப்பவேண்டிய தபாற்கணக்கு :-

2.674.73 M
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUES
FRANCE

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

கலை இலக்கியம் அனைத்தும் உழைக்கும் வர்க்கத்திற்காகவேமேன்மேலும் உருவாக்கப்படவேண்டும் என்பதை புரட்சியாளர் அனைவரும் ஏற்றுக்கொண்டாலும், உழைக்கும் வர்க்கக் கவிதைகள் எந்த விதத்தில் இருக்கவேண்டும், என்பது ஒரு புதிராகவே இருந்தது. பெரும்பாலும் அறிவு ஜீவிகள் மலையுச்சியில் நின்று கொண்டு அடிவாரத்தில் கஷ்டப்படும் உழைக்கும் மக்களைப் பார்த்து அனுதாபப்படும் கவிதைகளே புரட்சிக் கவிதைகளாகப் போற்றப்பட்டன. அந்த வடிவத்தைச் சரியென்று ஏற்றுக்கொள்ள முடியாமல் அதே சமயம் புதியவடிவமும் தெரியாமல் இருட்டில் தடுமாறிய புரட்சி இலக்கியவாதிகளுக்கு வழிகாட்டும் ஒளிச்சுடர்களாக வந்தன செரபண்டராஜுவின் கவிதைகள்: உழைக்கும் மக்களில் ஒருவனாக நின்று அவர்களது உணர்வுகளை அவர்களது இசை வடிவத்திலேயே, மொழியிலேயே வெளியிடும் செரபண்டராஜுவின் கவிதைகள், புரட்சிக் கவிதைகளுக்கு இலக்கணமாகத் திகழ்கின்றன. அதனால்தான் தமிழக மக்களுக்கு அவரை அறிமுகம் செய்வது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியாகக் கருதி இப்புத்தகம் வெளியிடப்படுகிறது.

ஆங்கிலத்தில் 'Sword Songs' (வாள் கவிதைகள்) என்ற பெயரில் 'விரசம்' கவிஞர்களால் தெலுங்கிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்ட கவிதைத்தொகுதியின் தமிழ் மொழி பெயர்ப்பே இந்தத் தொகுதியாகும். ஆங்கில நூலுக்கு சுரா எழுதிய செரா பற்றிய மதிப்பீட்டையே இத் தமிழாக்க நூலுக்கும் சாலப் பொருந்துவதால் மீளவும் அதனையே இங்கும் வெளியிடுகின்றோம். மேலும் இதில் 'போர்' என்ற கவிதையும் 'புரட்சிப் போரின் காலமடா' என்ற பாடலும் சேர்க்கப்பட்டுள்ளன.

www.padippakam.com

இப்படி சேர்க்கப்பட்டது எவ்வகையிலும் 'ஸ்வார்ட் ஸாங்க்ஸ்' நூலுக்கு விலகி இருக்கவில்லை என்றே கருதுகிறோம்.

இப்புத்தகத்திலுள்ள 'மலைகளையே பிளந்திட்டோம்' என்ற பாடல் தமிழ்நாடு மக்கள் கலைமன்றத்தாரால் மொழி பெயர்க்கப்பட்டு தமிழகத்தின் வீதியெங்கும் இசை முழக்கமிட்டு வருவதாகும். 'புரட்சிக் கிராமம்' என்ற கவிதை கோ. சடை அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு செந்தாரகை இதழில் வெளிவந்ததாகும். இது தவிர பிற கவிதைகளும் முன்னுரையும் தோழர் கலைசெல்வன் மொழியாக்கம் செய்துள்ளார். இவர் பாடல்களை மொழியாக்கம் செய்யும்போது அதன் கருத்து கெடாமல் இசைக் கேற்பச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் வெளிவருவதற்கு ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் பணியாற்றிய தோழர். அரசுக்கு நன்றி. நூலை அச்சிடுவதில் சிறந்த முறையில் ஒத்துழைத்த அச்சகப் பணியாளருக்கும், முகப்போவியம் வரைந்த ஓவிய நண்பருக்கும் நன்றிகள்.

இதைப் படித்து கருத்துக்கள் கூறி, எமது பதிப்பு முயற்சியை ஊக்குவிக்க வேண்டும் என்று வாசக நண்பர்களை வேண்டுகிறோம்.

**நூறு பூக்கள் பதிப்பகம்.**

படிப்பகம்

www.padippakam.com

# தெலுங்கு இலக்கியத்தில் செரபண்டராஜு

சு. ரா.

ஒரு நாட்டிற்குள்ளோ ஒரே நீதிமன்றத்திற்குள்ளோ
கருப்புக் கோட்டுக்களாலோ கரன்சிநோட்டுக்களாலோ
தீரப் போகும் வழக்கல்ல என் வழக்கு
குற்றவாளிக் கூண்டில் ஏற்றிப் பாருங்கள் என்னை.

..................
வாழ்க்கையென்ற உலகின் எந்த மூலையிலாவது
உண்மையிலேயே நீதி வழங்கும்
நீதிமன்றம் ஒன்றிருந்தால்
குற்றவாளிக் கூண்டில் ஏற்றிப்பாருங்கள் என்னை.

உணர்ச்சிப் பிழம்பான இந்த அறைகூவலோடு 1965 ஆம் ஆண்டு தெலுங்கு இலக்கியவானில் உதித்த செரபண்டராஜு அன்றைய 'திகம்பரக்கவிகள்' (நிர்வாணக் கவிகள்) கூட்டத்தில் ஒருவராவார். அது ஜ்வாலமுகி, நிகிலேஸ்வர், மஹாஸ்வப்னா, பைரவய்யா, செரபண்டராஜு, நக்னமுனி ஆகிய அறுவர் கொண்ட குழுவாகும்.

ஆந்திரநிலப்பிரபுத்துவத்தின் மாநகரமான ஹைதராபாத்தைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டிருந்தனர். அவர்களது கவிதை உலகப் பிரவேசமே பரபரப்பானது. (நடு இரவில், நடுத்தெருவில் விலைமாது ஒருத்தியின் தலைமையில் தங்கள் கவிதைத் தொகுப்பை வெளியிட்டனர்.) கவிதைகளோ, கூச்சமற்றவை (முதல் தொகுதியின் முதல் கவிதையின் பெயரே 'ஆத்மாவின் பெண்குறி') ''இதயத்தைச் சுற்றியுள்ள பொய் ஆடைகளைக் கிழித்தெறிந்து,



படிப்பகம்

www.padippakam.com

அதைத் துளைத்து, புதிய ரத்தம் பாய்ச்ச வரும், அழுத்தமான, வீரமான காட்டுக்கூச்சல்'' என்று தங்கள் கவிதைக்கு இலக்கணம் கூறினர்.

அன்றைய தெலுங்கு சமுதாயமும், இலக்கியமும் அத்தகையதொரு ரத்தத்திற்கான தேவையில் இருந்தது. ஆந்திராவின் அரசியலும், சமுதாய வாழ்வும் சீரழிவின் உச்சகட்டத்தை அடைந்திருந்தது. பொய்ம்மையும், ஊழலும், இரட்டை வேட வாழ்க்கையுமே மேல் மட்டத்தின் நாகரீகமாய் இருந்தது. ஒன்றொடொன்று மோதிக் கொண்டிருந்த சாதிப்பிரிவுகளின் சுயநலப் போர்களே, காங்கிரஸ் தலைமையில் அரசியல் என்ற பெயரில் அழைக்கப்பட்டது. தெலுங்கானா ஆயுதப் போரை வஞ்சகமாக நிறுத்தியதிலிருந்து சீரழியத் தொடங்கிய பொது உடைமைக் கட்சியோ மெல்ல, மெல்ல தேர்தல் பாதைச் சகதியில் மூழ்கிக் கொண்டிருந்தது. அதிலும் கூட அவர்களது உறுப்பினர்கள் எண்ணிக்கை 77-இல் இருந்து 20 பேராகக் குறைந்து முகவரி இழந்து கொண்டிருந்தனர். அதுவரை இருந்த அரசியல், சமுதாய இயக்கங்கள் அனைத்தும் மக்கி மறைந்து ஆண்டுக்கு ஒரு முறை விழா எடுத்து நினைவு படுத்திக் கொள்ளப்படும் வெறும் சடங்குகளாயின. தொலை நோக்கற்ற மக்கள் தங்களது புகழ்மிக்க இறந்த காலத்திலிருந்து மெதுவாக விலகிச் சென்று கொண்டிருந்தனர். இதுதான் 'செரா' பார்க்க 'மறுத்த' அன்றைய அரசியல் நிலை.

நாலாபுறமும்
அச்சத்தால் குலை நடுங்கும்
சூறைக் காற்றின் ஓசை
இங்கு அமைதியில்லை, ஒளியில்லை
இருப்பதெல்லாம்
மேலும், மேலும் கருமை படரும் விழிகள்
ஓ! இதை என்னால் பார்க்க முடியாது.
பார்வைகளில்



படிப்பகம்

www.padippakam.com

நடனமாடும் கொலைவாட்களின் குரூரம்
பேச்சிலோ,
படமெடுத்த நாகத்தின் கொலையழகு.
என்னால் பார்க்க முடியாது
என்னால் பார்க்க முடியாது.

(என்னால் பார்க்க முடியாது '1965)

நமது கவிஞன் பார்க்க மறுத்த இந்த சமுதாயத்தின் இலக்கியமும் சீரழிவின் உச்சத்திலிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய சீர்திருத்த இலக்கியத்துடன் நவீன தெலுங்கு இலக்கியம் தொடங்குகிறது. இந்த மறுமலர்ச்சி, காதல் கவிஞர்களுக்கு ஸ்ரீ. ஸ்ரீயின் வரவு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. நவீன உரைநடை, கவிதை இரண்டுமே தனது முற்போக்குப் பயணத்தை அவருடன் 1930-இல் இருந்து தொடங்கியது. அந்தப் பயணத்தை 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (RWA) மற்றும் பிரஜா நாட்டிய மண்டலி ஆகியவற்றின் தொடக்கம் விரைவு படுத்தியது. தெலுங்கானா உழவர் போராட்டம் மிகச் சிறந்த கவிஞர்களையும், பாடகர்களையும், மட்டுமல்ல, மிக அருமையான நாவலாசிரியர்களையும், நாடக ஆசிரியர்களையும் கூட உருவாக்கியது. 1950ஆம் ஆண்டுகளில் இயக்கம் படிப்படியாக உலர ஆரம்பித்தது. முற்போக்கு எழுத்தாளர்களும், பிரஜா நாட்டிய மண்டலிக் கலைஞர்களும், சினிமாத் தொழிலில் கூலி அடிமைகளாகக் கோடம்பாக்கத்திற்கு குடிபெயர்ந்தனர். அடுத்த பத்தாண்டுகளில் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள் மிகச் சிலரே இருந்தனர். இலக்கியத்தின் உள்ளடக்கங்களை அகாடமிப் பரிசுகளும், பணமுடிப்புக்களும் நிர்ணயித்தன. மூலதன வருகையால் இலக்கியம் கடைச்சரக்கானது படைப்பாற்றல் மரணமடைந்தது; பெரிய வணிக நிறுவனங்களும் பெரு எண்ணிக்கையில் விற்கும் வார இதழ்களும் உருவாயின.

இலக்கியத்தின் இடம் தொடர்கதைகளாலும், சினிமாவை மனதில் கொண்டு எழுதப்பட்ட கதைகளாலும்



படிப்பகம்

www.padippakam.com

பறிக்கப்பட்டது. இந்தக் கோமாளித்தனத்தைதான் திகம்பரக் கவிகள் சாடினர்.

தங்களது பரபரப்பான, முரட்டுத்தனமான, கூச்சமற்ற முதல் கவிதைத் தொகுதியை 1965-ஆம் ஆண்டு வெளியிட்டனர், அவர்களது தாக்குதல் ஒளிவுமறைவற்றது. செராவின் வார்த்தைகளிலேயே சொன்னால்.

"சந்தர்ப்பவாதச் சீமான்களின்
புரவலர்களின்
பூட்ஸ்காலை நக்கிப் பிழைத்து
அவர்களின் நிழலில்
மாளிகைகள் கட்டியவர்களே
அவர்களின் அடித்தளம் நொறுங்குவதற்கு முன்னால்
நான் உங்களை அனுப்ப விரும்புகிறேன்
சிறைச் சாலைக்கல்ல;
கசாப்புக்கடைக்கு (1966)

பிறகு 1966 ஆம் ஆண்டு டிசம்பரிலும், 1968 ஆம் ஆண்டு ஜுன் மாதத்திலும் மேலும் இரு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டனர். அன்றைய இலக்கிய வட்டத்தின் பெருந்தலைகள் இவர்களைக் கண்டு முகம் சுளித்தன. நடுத்தர வர்க்கங்கள் வசை பாடின. முற்போக்குப் போர்வை போர்த்திய எழுத்தாளர்களோ இவர்களை லும்பன்கள், அராஜகவாதிகள் , என்று வர்ணித்தனர். ஆனால் இளைஞர்களோ இவர்களை நேசித்தனர். ஏனென்றால் இவர்கள் தங்கள் கவிதைகளை கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பெருந்திரளான இளைஞர்களிடையே எடுத்துச் சென்றனர். செரா இவ்வாறு எழுதினார்.

"உலகக் கல்லறைகளின்
அழிவற்ற கவிதைகளில்
அமைதியான எதிர்காலத்தை
நினைத்து ஏங்கும்



படிப்பகம்

www.padippakam.com

குழந்தைகளின் கனவுகளில்
எனது கவிதைகள் கண்ணீர் சிந்துகின்றன.
தலைமுறை தலைமுறையாக
மனிதனுக்காக
............
வியாதிபிடித்த புராணக் கதைகளால்
பாதிக்கப்பட்டவர்கள்-
பண்டிதர்கள்-விலங்குகள்-
ஆண்மையுமற்ற, பெண்மையுற்ற
எழுத்தாள அலிகள்-
அனைவரும் நடமாடப்போகிறார்கள்
எனது கவிதைகளுடன்
எனது மனித உலகத்தில்

(எனது மனித உலகத்தில் 1966)

கவிஞர்கள் என்ற முறையில் அவர்களிடையே ஒரே மாதிரியான சமுதாயக் கண்ணோட்டம் இல்லாதிருந்தாலும், ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்தன்மை இருந்தது. அவர்களில் செராவும் ஓரளவு ஜ்வாலமுகியும் மற்றவர்களிடம் இல்லாத ஒரு சமுதாய விழிப்புணர்வு பெற்றிருந்தனர். சமுதாய நிதர்சனங்கள் செராவை எவ்வாறு பாதித்தன என்பதை கீழ்வரும் வரிகளில் காணலாம்.

அன்னை பூமியின் குளிர்ந்த இதயத்தை
பிளந்து கொண்டு வெளிவந்து
சலசலத்தும், முணுமுணுத்தும்
சுழன்று, சுழன்றும்
மெல்ல, மெல்ல ஓடுகின்ற நீருற்று
எந்த தலைமுறையின் கண்ணீர்த் துளிகளோ

(வானம் ஓலமிடுகிறது—1966)

தங்களது மூன்றாவது கவிதைத் தொகுதியை வெளியிடும் பொழுது திகம்பரக் கவிகளின் சமுதாய விமரிசனங்கள் மேலும் கூராயின. தொழுநோய் பிடித்த இந்த சமுதாயத்தை அழிக்கும் பணியில் தங்களுடன் சேருமாறு



படிப்பகம்

www.padippakam.com

இளைய சமுதாயத்திற்கு அழைப்பு விடுத்தனர். அதே நேரத்தில் தான் செரா 'வந்தே மாதரம்' என்ற புகழ் பெற்ற பாரதத்தாய் வாழ்த்தை எழுதினார்.

ஓ எனதருமைத் தாய்நாடே! .....
அன்னையும் நீயன்றோ; அப்பனும் நீயன்றோ
தேடிவரம் கொடுக்கும் தெய்வமும் நீயன்றோ
சமுதாய விரோதிகளின் சயன அறை தேடிச்
சல்லாபம் புரிகின்ற கற்பன்றோ உன்கற்பு
உறுப்புக்கள் அத்தனையும் உலகத்தின் சந்தையிலே
அடமானம் வைத்துவிட்ட அழகன்றோ உன் அழகு
(இதே தொகுதியின் இரண்டாவது கவிதை)

அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையை லேசாக விமர்சித்தாலும் கூட தேசபக்தியற்ற செயலாகக் கருதப் பட்ட காலத்தில் இப்படி ஒரு கவிதையை எழுதுவதற்கும், அதை நாடெங்கும் முழங்குவதற்கும் பயங்கர துணிச்சலும், கோபமும் வேண்டும். இவை இரண்டுமே திகம்பரக் கவிஞர்களிடம் ஏராளமாக இருந்தன. (பல ஆண்டு களுக்குப் பின் அவசர நிலை அமுலில் இருந்த பொழுது, செஞ்சலகுடி (ஹைதராபாத்) சிறையில் நடந்த சுதந்திர தினக்கூட்டத்தில் இதை பாடியதற்காக செரபண்டராஜு ஆர்.எஸ்.எஸ். தலைவன் ஒருவனால் தாக்கப்பட்டார்.)

சரியாகச் சொன்னால், திகம்பரக் கவிஞர்களின் இயக்கத்தை அதன் வரலாற்றுப் பின்னணியுடன் சேர்த்துப் பார்த்தால்தான் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அறுபதாம் ஆண்டு களின் பிற்பகுதி... அடுத்த தலைமுறையினரின் படைப் பாளிகளின் போராட்டங்களைப் பிரதிபலித்தது. இந்த புரட்சிக்கவிஞர்கள் தெலுங்கு இலக்கியத்தின் அன்றைய காலகட்டத்தைப் பிரதிபலித்ததுடன் மட்டு மல்லாது அவர்கள் இய்க்கம் அன்றைய இலக்கிய அமைப்புக் களை எதிர்த்த போராட்டமும் ஆகும்.



படிப்பகம்

www.padippakam.com

நவீன தெலுங்கு இலக்கியம், அதிலும் குறிப்பாக கவிதைகள், தெலுங்கு நடுத்தரவர்க்கத்திடையே இருந்த போக்குகளாலும், சிந்தனைகளாலுமே உருப்பெற்றன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க கால மறுமலர்ச்சி, காதல் கற்பனைகள், மற்றும் தேசியப் போராட்டப் போக்குகள், போல்ஷிவிக் புரட்சி, உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏகாதிபத்தியங்களின் பொருளாதார மந்தம், நாற்பதாம் ஆண்டுகளின் இறுதியில் தோன்றிய நிலப்பிரபுத்துவ எதிர்ப்புணர்வு இவை அனைத்தும் தெலுங்கு நடுத்தர வர்க்க சிந்தனைகளைப் பாதித்தன. தெலுங்கு கவிதைகளுக்கு உருவம் அளித்தன. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் புகழ்மிக்க காலங்களில் சாதாரண கவிஞர்கள்கூட தங்களுக்குத் தெரிந்த முற்போக்கை எழுதினர். பின்னால் சமுதாய வாழ்வும் தனிமனித வாழ்வும்கூட கடைச்சரக்காக ஆனபொழுது அவர்களது கவிதைகளில் (கொடுக்கல், வாங்கல் மதிப்பை தவிர) வேறு எந்த மதிப்பும் இல்லாது போயின. திகம்பர கவிஞர்கள் இயக்கம், அரை நூற்றாண்டாக தெலுங்கு இலக்கியத்தின் ஆக்ரமித்த நடுத்தரவர்க்க கலாச்சார பாதிப்புகளுக்கு சமாதிகட்ட மிகச் சரியான நேரத்தில் உதித்தது. பழமையுடன் இணைந்த தொப்புள்கொடி அறுக்கப்பட்டது.

தங்களது அழித்தொழிப்பு வேலையை முற்றாக முடித்தபின், அதில் சிலர், தங்களது வெற்று வெளிக்கும் அப்பாற்பட்ட லட்சியங்களைத் தேடினர்.

செரா எழுதினார்:

''கண்ணீர் மட்டும் தானா?
உன்னுள்ளும் உன் சமுதாயத்ம்ற்குள்ளும்
கண்ணீர்த் துளிகளைத் தவிர
வேறு எதுவுமே இல்லையா?

(கண்ணீர் மட்டும் தானா 1968)



படிப்பகம்

www.padippakam.com

கண்ணீர்த்துளிகள் மட்டும் அல்ல, அந்தத் தலைமுறைக்குள் ரத்தமும், போராட்டங்களும் நிறைந்திருந்தன. ஆனால் அந்தப் போராட்டங்கள் தூரத்துக் காடுகளில் வசித்த காட்டு மக்களுக்குச் சொந்தமாயிருந்தன.

* * *

ஆந்திராவின் வடகிழக்கு எல்லைப்பகுதியில், சிரீகாகுளம் மாவட்டத்தைச் சேர்ந்தது பார்வதிப்புரம் ஏஜென்சி. இங்கு பழங்குடி மக்களின் போராட்டம் 1950-ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலேயே தோன்றி விட்டது. 1967-ல் அந்த இயக்கத்தில் புரட்சிகரமான திருப்பம் நேர்ந்தது. கவிஞர் வேம்பட்டி சத்யநாராயணராவ மலைவாழ் மக்கள் சங்கத்தின் தலைவரானார். இச்சங்கம் CPI (M) தலைமையில் இயங்கியது. இந்தச் சங்கம் நக்சல்பாரி உழவர் போராட்டத்தால் CIP (M)-ல் தோன்றிய கருத்து வேற்றுமைகள் இதிலும் பிரதிபலித்தன. மார்ச் 1968-ல் இந்த இயக்கம் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தது.

அடர்ந்த காடுகளும், மலைப் பகுதிகளும் நிறைந்த அந்தப் பிரதேசத்தின் சவாரா மற்றும் ஜடாபு இனத்தைச் சேர்ந்த சுமார் ஏழு லட்சம் காட்டுவாசிகள் போரில் குதித்தனர். 1968-ல் தொடங்கிய CPI (ML) கட்சியின் ஒரு பகுதியாக இது மாறியது. போராட்டத்தின் உச்சகட்டத்தில் அந்தப் பகுதியிலிருந்த 518 கிராமங்களில் 300 கிராமங்கள் புரட்சியாளர்களின் கையிலிருந்தன. 12,000 ஆயுதக்காவல் படையினர் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்தனர். ஒரு வருட காலத்திற்குள் 2,000 காட்டு மக்கள் கைது செய்யப்பட்டனர். இயக்கத் தலைவர்கள் 93 பேர் மோதல் என்ற பெயரில் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் சுப்பராவ் பாணிக்ரஹி.

முப்பத்தி ஐந்து வயதான பாணிக்ரஹி CPI (ML) கட்சியின் சோனபட் பிரதேச செயலாளர். இயக்கத்தின் பிரதான கவிஞர் பாடகர். போராட்ட வரலாற்றை அப்



படிப்பகம்

www.padippakam.com

பொழுது பிரபலமாயிருந்த 'ஜமுகல கதா' நாட்டுப் பாடல் வடிவில் நீண்ட கதைப்பாடலாக எழுதினார். இந்த வடிவம் மூன்று பேர் நடிக்கும் பாடல்கள் நிறைந்த நாடகமாகும். இந்தக் கதைப் பாடலும், அவருடைய மற்ற பாடல்களும் இயக்கத்தின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டன. டிசம்பர் 1969-ல் பாணிக்ரஹி காவல்துறையின் கையில் சிக்கி தெக்காலியில் சித்ரவதைசெய்து கொல்லப்பட்டார். ஆனால் தெலுங்கு எழுத்தாளர்களின் இளைய தலைமுறையினரிடம் இவரது பாதிப்பு வேலும் பலமாகப் பரவியது. பிப்ரவரி 1, 1970-ம் ஆண்டில், ஸ்ரீ ஸ்ரீயின் அறுபதாம் ஆண்டு விழாவில் முற்போக்குக் கவிஞர்களுக்கு சவால் விட்ட 'விசாக வித்யார்த்துலு' என்ற விசாகபட்டினத்தைச் சேர்ந்த மாணவர் அமைப்பும், 'திருகபாடு கவுலு' (புரட்சிக் கவிஞர்கள்) அமைப்பும் இவரது பாதிப்பின் விளைவேயாகும்.

இவ்வாறு ஆந்திர மாநிலத்தில், 1960-ன் பிற்பகுதிகளில், உலகம் முழுவதும் புரட்சிகர மார்க்ஸியம் பரவிக்கொண்டிருந்த கால கட்டங்களில் இரண்டு இணையான இயக்கங்கள் தோன்றின. ஒன்று இலக்கிய உலகில் திகம்பர கவிகளின் கவிதை இயக்கம் மற்றொன்று அரசியல் வாழ்வில் ஸ்ரீகாகுளம் பழங்குடி மக்கள் போராட்டம். இவை இரண்டின் கலப்பில்தான் ''விப்லவ ராச்சயித்தில சங்கம் (சுருக்கம் ''விரசம்'' புரட்சி எழுத்தாளர் சங்கம்) தோன்றியது. சிரீகாகுளம் போராட்டத்தின் புகழ்பெற்ற இரு தலைவர்களான வேம்படப்பு சத்யமும், ஆதிபத்ல கைலாசமும் கொலை செய்யப்படுவதற்கு சரியாக ஒரு வாரம் முன்பு 1970-ம் ஆண்டு ஜூலை நான்காம் தேதி விரசம் தொடங்கப்பட்டது, அவர்களது மரணம் காரணமாக அவர்களது பெயர்கள் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டன. இயக்கம் வெளியிலிருந்தும் மக்கள் ஆதரவைப் பெறத் தொடங்கியது. கவிஞர்கள் இருவரும் பெயர் தெரியாத நிலையிலிருந்து நேரடியாக அழியாகப் புகழ் பெற்றனர்.

விரசம், மூன்று தலைமுறையினரையும், மூன்று வகையான போக்குகளையும் தன் பக்கம் இழுத்தது. 1930-ம்



படிப்பகம்

www.padippakam.com

1960-ம் ஆண்டு எழுத்தாளர் இளைஞர்கள் முந்தைய தலைமுறை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீஸ்ரீ, குடும்பா ராவ், ரவிசாஸ்திரி, கே.வி.ரமணரெட்டி, ஸ்ரீகாகுளம் போராட்டங்களால் கவரப்பட்ட புரட்சிக் கவிஞர்கள் மற்றும் மாணவ எழுத்தாளககள், திகம்பரக்கவிஞர் அறுவரில் நான்குபேர் ஒன்றாக இணைந்து 'விரசம்' அமைப்பு உருவாக்கினர். அவர்களில் செரபண்டராஜூம் ஒருவர். விரசம் நக்சல்பாரி இயக்கத்தை வெளிப்படையாக ஆதரித்தது. இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள்தான் இதன் முதல் ஆதரவாளர்கள். கவிஞர்கள் திரளான பொதுக்கூட்டங்களில் உரையாற்றினர். ஊர்வலத்தை தலைமை தாங்கி நடத்திச் சென்றனர். மக்களுக்கு கவிதைகளை வாசித்தனர். ஒரு தலைமுறை இளைஞர்களுக்கே அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்திய இலக்கிய இயக்கமாக திகழ்ந்தனர்.

கம்பம் நகரில் நடந்த விரசத்தின் முதல் கூட்டத்திலேயே, அக்டோபர் 1970-இல் செரபண்டராஜூவின் 'திசை காட்டும் கருவி' என்ற முதல் கவிதைத் தொகுதியை ஸ்ரீ ஸ்ரீ வெளியிட்டார். அன்றைய காலகட்டத்தில் புரட்சி கவிதைகளின் சிறந்த வடிவமாக புதிய கவிதை அல்லது வசன கவிதைகளே கருதப்பட்டன. தலைமறைவுக் கவிஞர் 'சிவசாகர்' ஒரு பாடலை எழுதி அதில் ஒரு மாறுதலை ஏற்படுத்தினார். 'ஜனசேனா' என்ற மற்றொரு கவிஞரும் பாடல்கள் எழுதத் தொடங்கினார். செரபண்டராஜூவும் தனது முதல் பாடலான ''கொலி மண்டு குன்னாடி''யை (உலைக்களத்தில் நெருப்பு) எழுதினார். அதிலிருந்து 'செரா' தனக்கு இயல்பான பாதையில் பயணம் தொடங்கினார். ஏனென்றால் தனது உணர்வுகளை புதிய கவிதையில் கொட்டித் தீர்க்கும் வெறும் நடுத்தர வகுப்புக் கவிஞரல்ல அவர். ஹைதராபாத் நகரிலிருந்து சுமார் 24 கி. மீ. தொலைவிலுள்ள அங்குசபுரம் என்ற கிராமத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த 'பக்கையா' தான் செரபண்டராஜூ (1944-ஆம் வருடம் என்று சான்றிதழ்கள் கூறினா



படிப்பகம்

www.padippakam.com

லும் ஏழை விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மற்றவர்களைப் போலவே அவரது பிறந்த தேதி அவருக்கே தெரியாது,)

1940ஆம் ஆண்டுகளில் அங்குசபுரம் சுமார் மூன்று சதுர மைல்கள் பரப்பளவு கொண்ட ஆயிரத்திற்கு சற்று குறைவான மக்கள் தொகை அடங்கிய சிற்றூரும் அது நிசாமின் நேரடிக் கண்காணிப்பிலிருந்த 'அப்ராப்-இ-பால்டா'வின் ஒரு பகுதியாதலால், சமுதாய வாழ்க்கை கொடிய அடக்குமுறைகளுக்கு உள்ளாயிருந்தது. தெலுங்கானா இயக்கத்தின் நரம்பு மையமாகத் திகழ்ந்த, நலகொண்டா மாவட்டத்தைச் சேர்ந்த போங்கீர் தாலுகா இதன் எல்லைக்கு வெளியே இருந்தது.

மழை குறைந்த செம்மண் நிலப்பிரதேசமாகையால் இங்கு முக்கியமான பயிர் கோவார் ஆகும். இயற்கையிலும் சமுதாய அமைப்பாலும் ஒடுக்கப்பட்ட இந்த மண்ணில் தான் பக்கையா பிறந்தார். பக்கையா அவரது செல்லப் பெயர். அவரது இயற்பெயர் அப்பகுதியின் உள்ளூர் தெய்வமாகக் கருதப்பட்ட ''பாலநரசிம்மா'' ஆகும். பின்பு இவரை உலகுக்கு அறிமுகப்படுத்திய இவரது ஆசிரியர் இவருக்கு ''பாஸ்கர ரெட்டி'' என்று பெயர் மாற்றம் செய்தார். அதனால்தான் அவரது அங்கீகரிக்கப்பட்ட பெயர் 'பதம் பாஸ்கர ரெட்டி' ஆகியது. ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்த மூத்த அண்ணன் இவரைப் படிக்க வைத்தார். தனது ஆசிரியரின் ஊக்கத்தினால், பள்ளிப்பருவத்தில் கவிதைகள் எழுதத் தொடங்கினார். தனது பதினேழாம் வயதில் திருமணம் செய்து கொண்டார். (வழக்கம்போல் மனைவிக்கு காதல் கவிதைகள் எழுதித் தள்ளவும் மறக்கவில்லை) பள்ளிப் படிப்பு முடிந்ததுமே ஆசிரியரானார். முதலில் தன் சொந்த ஊரிலும், பிறகு பக்கத்து ஊர்களிலும் பணிபுரிந்தார். ஒரு நாள், தனது சூழ்நிலையில் அலுப்படைந்து; கலைஆர்வத்தால் கவரப்பட்டு சாந்திநிகேதனில் சேர்வதற்காக வீட்டை விட்டு ஓடினார். ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

கல்கத்தா சென்றதும், சாந்தி நிகேதன் தன்னைப் போன்ற வர்களுக்கு லாயக்கில்லை என்று உணர்ந்து வீடு திரும்பி னார். 1962-இல் ஹைதராபாத்திற்குக் குடிபெயர்ந்தார். அங்கு ஒரு அரசுப் பள்ளியில் 150-300 அடிப்படைச் சம்பள விகிதத்தில் தெலுங்கு ஆசிரியராகச் சேர்ந்தார். தன் இறுதி நாள் வரை அந்தசம்பள விகிதத்திலேயே வேலைசெய்தார். அந்த காலகட்டத்தில்தான் நிகிலேஸ்வருடன் தொடர்பு ஏற்பட்டு திகம்பர கவிகள் இயக்கத்தின் ஒரு பகுதியானார்.

செராவின் கிராமம் இருந்த பகுதி நாட்டுப்புறக்கவிதை களுக்கும், கவிதைகளுக்கும் பெயர் பெற்றது. கொந்தளிப் பான அரசியல், சமுதாய மாற்றங்கள் அனைத்தையும் சமாளித்து அந்த நாட்டுப்புற கலை வடிவங்கள் நீடித்தன. உழவர்களின் வாழ்வில் அவர்களுக்கென்று எஞ்சியிருந்த ஓரிரு சொத்துக்களில் முக்கியமானது அந்த நாட்டுப்புறக் கதைகளும், பாடல்களும்தான். தெலுங்கானா ஆயுதப் போராட்ட காலத்தில் உழவர்களின் வீடுகளையும் தாண்டி நலிந்த பாடல்கள் மீண்டும் சிறிது காலத்திற்குள், அதன் இயற்கை எல்லைக்குள் அடங்கிப் போயின. ஆனால் செராவின் பெற்றோருக்கோ அவை வாழ்வின் ஒரு பகுதி யாகவே இருந்தன. ஓர் துயரம் நிறைந்த, முகவரியற்ற நாட்டுப்பாடலை அவரது தந்தையார் அடிக்கடி முணு முணுத்துக் கொண்டிருப்பார்.

''ஆத்துநீரை ஏத்தம்போட்டு எறைச்சி ஊத்தினோம்
ஆயிரம் டன்னு நெல்லை நாங்க அறுத்துக் கொட்டினோம்
ஒத்தை நெல்லைகூட நானு தின்னதில்லிங்க-கேப்பை
கூழைத்தவிர அரிசிக்கஞ்சி குடிச்சதில்லிங்க.''

பல ஆண்டுகளுக்குப்பின் செரபண்டராஜு தனது பாடல் தொகுதியைத் தனது தந்தைக்கு அர்ப்பணித்த பொழுது இந்தப்பாடலைக் குறிப்பிட்டார். நிரந்தரமான ஒரு கவித்துவப் பார்வையை, நடுத்தர வர்க்கத்தின் எழுத்து இலக்கியங்கள் எங்கும் தேடி செரபண்டராஜு எங்கெங்கோ அலைந்தார். ஆனால் இறுதியாக நக்சல்பாரி இயக்கத்தின்



படிப்பகம்

www.padippakam.com

மூலமாகத்தான் இலக்கியத்தின் வேர்கள் நாட்டுப்புற வழக்கில் இருப்பதை மறுகண்டுபிடிப்பு செய்தார். அந்த அடிப்படையில், அவரது 'உலைக்களத்தில் நெருப்பு' என்ற பாடலின் மூலம்தான் செரா தனது இயல்பான இலக்கிய வடிவத்திற்குத் திரும்பினார் எனலாம்.

மேலும் அன்றைய காலகட்டத்தில் தான் வாய்மொழி இலக்கியங்கள் தெலுங்கு இலக்கிய உலகில் மீண்டும் மெல்ல காலடி எடுத்து வைத்தது. சிவசாகரும் செராவும் அதன் முன்னோடிகளாயினர். ஆனால் சிவசாகரோ தலைமறைவு அரசியல் பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் குரல் வெளி உலகிற்கு எட்டவில்லை. அதனால், நக்சல்பாரி இயக்க கால கட்டத்தின் முதல் கவிஞர்-பாடகராக செரபண்டராஜு உருவாகினார். மக்கள் திரண்டு நின்ற பொதுக்கூட்டங்கள் தோறும் பாடல் பாடத் தொடங்கினார். கணக்கற்ற பாடல்கள் எழுதினார். தயக்கமின்றி எப்போதும் பாடினார். ஆந்திராவின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை ஒரு தனி மனிதர் கலைக்குழுவாக மாறி மக்களைக் கவர்ந்தார். விரைவில் இயக்கம் அதன் முன்னோடியைத் தாண்டி வளர்ந்தது. 1973-ல் ஜனநாட்டிய மண்டலி (J.N.M.-மக்கள் கலை மன்றம்) தொடங்கப்பட்டது. கத்தார் வெகு விரைவில் பெயர் பெற்றார். மக்கள் கலைமன்றம் வழக்கொழிந்த பல கிராமிய மெட்டுக்களைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தியது மட்டுமல்லாமல் 'ஒக்கு கதா' போன்ற நாட்டுப்புறக் கலை வடிவங்களுக்கும் புத்துயிர் கொடுத்தது. மக்கள் கலைமன்றத்தின் இயல்பான இசை, பயன்படுத்திய அன்றாடச் சொற்கள், எளிமையான வடிவம் ஆகியவற்றால் மக்கள் அத்துடன் தங்களை உடனே ஒன்றுபடுத்திக் கொண்டனர். இயக்கம் காட்டுத் தீபோல் பரவியது. 'அருணோதயா' போன்ற பல கலை குழுக்கள் தோன்றின. கத்தார் தலைமையில் ஹைதராபாத் நகரில் ஒரே ஒரு கலைக்குழுவுடன் தொடங்கி விரைவில் எண்ணிக்கையில் வளர்ந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் அவர்களது பாடல் புத்தகங்



படிப்பகம்

www.padippakam.com

கள் 80,000 பிரதிகள் விற்றுள்ளன. இந்த வெள்ளத்தால் எழுத்து இலக்கிய உலகிற்குள் மீண்டும் வெற்றி நடை போட்டது. அதன் கூடவே மக்களும் வெற்றிப் பயணம் தொடங்கினர்.

செராவின் கவிதைகள் அவருடைய கால கட்டத்தை பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். கடந்த பத்தாண்டுகளில் நிகழ்ந்த எந்த முக்கிய நிகழ்ச்சியும் அவர் பேனாவிற்கும், இசைக்கும் தப்பவில்லை. பங்களாதேஷ் போர், வியட்நாம் விடுதலைப் போராட்டம், நக்சல்பாரி, ஸ்ரீகாகுளம், அவசர நிலை, கரீம்நகர், அடிலாபாத் அனைத்தும் அவரது பாடல்களில் இடம் பெற்றன. 1971-ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் சமயத்தில் இவ்வாறு எழுதினார்.

நமது கிராமத்தை நோக்கி
மீண்டும் படை எடுக்கின்றன-
கிளிமொழி பேசும்
வல்லூறுகள்;
ரத்தம் குடிக்க வரும்
கழுகுக் கூட்டங்கள்;
குழந்தைகளே!
கண் இமைகளே!
விழிப்போடிருங்கள்.

சுதந்திர தினத்தின் வெள்ளிவிழா ஆண்டான 1972-ல் இவ்வாறு எழுதினார்,

நாற்பத்தி ஏழில் என்வயது இருபத்தைந்து
அன்று என் இதயக் குளத்தில்
விடுதலை மலர்கள் பூத்துக் குலுங்கின.
இன்று என்வயது உங்களுக்கே தெரியும்.
இந்தத் தளர்ச்சி என்னுடையதல்ல
என்னை, என்தலைமுறையை நாசமாக்கிய
பாராளுமன்ற ஜனநாயகத்தின்
தோல்வியின் உருவகம்.

(நாற்பத்தியேழில் என்வயது இருபத்தைந்து)



படிப்பகம்

www.padippakam.com

மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கொரில்லா மறவர்களான பூமையாவிற்கும், கிஷ்டாகௌடாவிற்கும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பொழுது அவர்களுக்கு காணிக்கையாக செரா எழுதிய பாடல், இன்றளவும் அவரது பாடல்களில் மிகச்சிறந்த ஒன்றாக மதிக்கப்படுகிறது. 1975-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் நாள் அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்ட பொழுது, செராவும் சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது எழுதுகிறார் செரா:

இனிச் சிறை மீள்வது
எப்போதென்று தெரியும்.
அதனாலென்ன
எங்கே வாழ்ந்தாலும்
எப்பொழுதும் நான்
புரட்சிக்கு
அர்ப்பணமான
புதிய பாடல்...
இதோ இந்தக் கைதியின்
இதயமே என் வயல்...
இறவாக் கவிதைகளை
அதில் ஏராய் உழுவதுதான்
இனி என் லட்சியம்...
என் உயிரே
அடங்கும் போது தான்
இந்தத் தாகமும்
அடங்கும். (ஜூன்-26)

ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பொழுது ''ஒரே மரத்தின் கிளைகள்'' என்று பொருத்தமான தலைப்புடன் ஒரு கவிதை எழுதினார். கரீம் நகர் மாவட்டத்தின் ஜகத்தியால், சிர்சில்லா ஆகிய இரு தாலுக்காக்களும் 'கலவரப்பகுதி'யாக அறிவிக்கப்பட்ட பொழுது, ''கோதாவரி நதி ஓடிக் கொண்டிருக்கிறது'' என்ற கவிதையை



படிப்பகம்

www.padippakam.com

எழுதினார். செகந்திராபாத் சதி வழக்கில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டபொழுது, அரசியல் கவிதை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினார். அவரும், அவருடன் குற்றம் சாட்டப்பட்ட புரட்சி எழுத்தாளர்களும் அடிக்கடி நீதி மன்றத்திற்கு இழுத்து வரப்பட்டனர். பழைய அரசியல் கோஷங்களைக் கேட்டு அலுத்துப்போன செரா ஒவ்வொரு முறை நீதி மன்றத்திற்கு வரும் பொழுதும் ஒரு புதிய கவித்துவம் நிறைந்த அரசியல்கோஷத்தை உருவாக்குவார். பின்பு அதை பாடலாக்கி விடுவார். இவ்வாறு எழுதிய பாடல்களே ஒரு தனித்தொகுப்பாகும். கவிதைகளில் அரசியல் கோஷங்களை புகுத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டதற்கு பதில் சொல்பவர்போல் அரசியல் கோஷங்களை கவிதைத் தன்மையைப் புகுத்தினார்.

தனது காலத்தைத் தன் கவிதைகளில் பதிவு செய்த தோடு, செரா மக்கள் வாழ்வுக்காகவும், வாழுவழி தேடியும் நடத்திய போராட்டங்களை விவரிக்கும் எண்ணற்ற பாடல்களை எழுதினார். அவற்றிற்குத் தலை சிறந்த எடுத்துக்காட்டுகள். ஏ குலமப்பி (ஜாதி ஏதடா), கொண்டலு பகலேசினம் (மலைகளையே பிளந்திட்டோம்), பாலேறு பாட்ட (கூலி உழவன் பாட்டு) ''ராயி ரப்பகு செப்பன்னா' (என்து துயரங்களைப் பாறைகளிடம் போய்ச் சொல்வேனோ) முதலியன. 1974-இல் சிறையில் இருந்த பொழுது தனது சொந்த ஊரில் கூலி விவசாயிகள் போராட்டம் தொடங்கியதாகக் கேள்விப் பட்டவுடன் அவர் எழுதிய 'மா பல்லே' (எமது கிராமம்) அழியாப் புகழ் பெற்றது.

இடதுசாரி கவிதைகள், பொதுவாக ஒரே மாதிரி யான உள்ளடக்கமும் செல்லரித்துப் போன உருவமும் கொண்டவை என்று குற்றம் சாட்டப்படுவது வழக்கம்; இந்தக் குற்றச்சாட்டில் ஓரளவு நியாயமும் இல்லாமல் இல்லை, ஆனால் செராவும் மற்ற தெலுங்கு புரட்சி இலக்கிய இயக்கமும் வாய்மொழி இலக்கியங்களுடன்



படிப்பகம்

www.padippakam.com

தங்களை இணைத்துக் கொண்டதால் மேற்கூறிய தவறி லிருந்து விடுபட்டனர். வாய்மொழி கவிதைகளில் காலம் காலமாகவே இசையும், நடனமும், பிரிக்கமுடியாதப்படி இணைந்துள்ளன. அதன் மொழி, மரபிலும், அமைப்பிலும் வட்டார பேச்சு நடையையே பயன்படுத்துவதாகும். அதன் கற்பனையோ கிராமிய மனம் கமழ்வதாகும். அதன் ஊற்றுக்கண் மக்களின் அன்றாட வாழ்க்கையாகும். இத்தகைய கவிதைகளுக்கும் கதைப் பாடல்களுக்கும் அச்சடிச்ச புத்தகங்களுடன் எந்த சம்பந்தமும் இல்லை. அவை காலம், காலமாக மக்களின் உதடுகளில் ஒலித்துக் கொண்டிருப்பவை, இதயங்களில் நடனமாடிக் கொண் டிருப்பவை. இங்கு வாழ்க்கையும், கவிதையும் ஒன்றாகி விடுகிறது. இதனால்தான் இதில் பல்சுவைகளும் நிரம்பி யுள்ளன. ஏனென்றால் நடுத்தர வர்க்க வாழ்க்கையின் உப்புச்சப்பற்ற தன்மை, ஏழை மக்களின் குறிப்பாக இளம் மக்களின் வாழ்க்கை முறையில் இல்லை. அரசியல் பொரு ளாதார அகராதியில் அவர்கள் ஒரே வர்க்கமாக கருதப்பட் டாலும் அன்றாட வாழ்க்கையில் வேறுபாடுகள் நிறைய உள்ளன. இந்தியாவின் பலபாகங்களைச் சுற்றிப்பார்த்த யாருக்கும் அதன் கணக்கற்ற வேறுபாடுகள் தெரிந்திருக்கும். அந்த வேறுபாடுகள் பிரதேசங்களுக்கு இடையிலே மட்டு மல்லாமல் ஒரு பிரதேசத்தின் பல பகுதிகளுக்கு இடையிலே யேயும், ஒரு பகுதியின் பல சமுதாயக் கட்டுமானங்களுக் கிடையேயும் கூட உள்ளன.

அதனால் வாய்மொழி இலக்கியத்தை நாடிச் செல் கின்ற, புரட்சிகர எழுத்தாளர்கள் இரண்டு வழிகளில் பயன் அடைகிறார்கள். ஒருபுறம் மக்கள் மொழியிலேயே எழுதக் கற்றுக் கொள்வதுடன் மறுபுறம் வகைவகையான சுவைகளைக் கண்டறிகிறார்கள், அதுமட்டுமல்லாமல் படைப்பிற்கு கருப்பொருள் தேடி அடங்காத் தாகத்துடன் அலையும் கலைஞன் இறுதியில் தனது சொந்த மக்களை அவர்களது வரலாற்றை, துயரங்களை போராட்டங்களைக் கண்டறிகிறான். அவனது கவிதை மட்டுமல்ல அவனே



படிப்பகம்

www.padippakam.com

பெரும் மாற்றத்திற்கு ஆளாகிறான். கலை இங்கு ஓர் இரு வழிப் பாதையாகிறது. செரபண்டராஜுவின், மொத்தத்தில் தெலுங்கு புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் புகழுக்கும் அதில் ததும்பும் வகை வகையான ரசங்களுக்கும் இதுவே காரணம்.

படிப்படியாக, வாழ்க்கையிலிருந்து தங்களை அந்நியப் படுத்திக் கொள்வதன் மூலம் ஆளும் வர்க்கங்கள் இலக்கியங்களுக்கெல்லாம், ஊற்றுக் கண்ணான தங்கள் கவிதைச் செல்வத்தை சாகடித்து விட்டனர். ஒரு புரட்சிக் கவிஞன் போராட்டத்தின்மீது அவனுக்குள்ள பற்றுதல் காரணமாக, மக்களுடன் உள்ள தொடர்பு காரணமாக தனது ஏழ்மை, துயரம் ஆகியவற்றால், வாழ்க்கைக்கும், கவிதைக்கும் இடையே முன்பு துண்டிக்கப்பட்டிருந்த தொடர்பை மீண்டும் கண்டறிகிறான். அந்த தொடர்பை ஏற்படுத்திய கவிஞர்களில், மிகச்சிறந்தவொருவர் 'செரா'.

'விரசம்' இயக்கத்தில் சேர்ந்ததிலிருந்து தனது வகுப்பறையின் நான்கு சுவர்களுக்குள்ளோ அல்லது வீட்டிற்குள்ளோ அடங்கி இருக்கவில்லை. அவரே 1972 ஆம் ஆண்டு 'விரசம்' இயக்கத்தின் செயலாளர் அறிக்கையைப் படித்த போது குறிப்பிட்டார். ''புரட்சிக் கவிஞன் தனது பேனாவில் மட்டும் இயங்கவில்லை, கால்களாலும்தான்.''

புரட்சிகர இயக்கமும் அதற்கேயுரிய எழுச்சி, வீழ்ச்சிகளாலும் சில்லறைச் சச்சரவிலும் பாதிக்கப்பட்டது. செராவும், இவையனைத்திலும் பங்கு பெற்றார். சாரு மஜீம்தார் இறந்தபொழுது அவருக்காக, இரங்கற்பா எழுதினார். மேலும் CPI (ML) மக்கள் யுத்தப் பாதை குழுவின் ஆதரவாளரானார். பல விமர்சகர்கள் அதற்காக அவரை பிளவு வேலை செய்பவர் என்று வர்ணித்தாலும் அவரது கவித்துவத்தை ஏற்றுக் கொண்டனர்.

புரட்சியின்மீது தாக்குதல் தொடுத்த அரசாங்கம் அதிலொருபகுதியாக 'விரசத்தை'யும்செரபண்டராஜுவையும் தொடர்ந்து துன்புறுத்தியது.



படிப்பகம்

www.padippakam.com

1970ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 'விரசம்' அமைப்பு தொடங்கிய ஆறாவது மாதம். செபண்டராஜு மற்றும் அமைப்பைச் சேர்ந்த அனைத்து எழுத்தாளர்களின் வீடுகள் போலீஸ் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. ஆகஸ்ட் 71இல் செரபண்டராஜு, ஜ்வாலமுகி, நிகிலேஸ்வர் ஆகியோர் ஆந்திர மாநில தடுப்புக் காவல் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, ஐம்பது நாட்களுக்குப் பிறகு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். 1972ஆம் ஆண்டில் விரசத்தின முதல் சிறுகதைத் தொகுப்பான ''இப்புடு வீஸ் துன்ன காலி'' (''இப்பொழுது வீசுகின்ற காற்று'') அரசால் தடை செய்யப்பட்டது. ஏனென்றால் அதில் செராவின் கதையொன்று இருந்தது. அந்தக் கதை பிரிவினை வித்தை தூண்டுவதாகக் குற்றம் சாட்டப்பட்டது. வேடிக்கை என்னவென்றால் ''சிரஞ்சீவி'' என்ற அந்தக் கதை போலீஸ் மோதலில் பங்கு பெற்ற ஒரு கான்ஸ்டேபிளின் உளப்போராட்டத்தை விளக்குவது.

(போலீஸ் கான்ஸ்டெபிள் செராவுக்கு பிடித்தப் பாத்திரமாகும். 1973இல் 'நம்மைப் போன்ற ஏழை' என்ற தலைப்பில் போலீஸ்காரனைப் பற்றிய ஒரு விவாதத்துக்குரிய பாடலை எழுதினார். மீண்டும் மா பல்லே [நமது கிராமம்] என்ற நாவலிலும் இதைப் பற்றி எழுதினார்.)

1973ஆம் ஆண்டு அக்டோபர் 11ந் தேதி வரவரராவ், எம். டி. கான் ஆகியோருடன் செராவும் மிசாவின்கீழ் கைது செய்யப்பட்டு 5 வாரங்களுக்குப்பின் உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். 1974ஆம் ஆண்டு மே 18ந் தேதி கே. வி. ரமணரெட்டி, ஈ. மதுசூதனராவ், எம். டி. கான், ரங்கநாதம், வரவரராவ் ஆகிய எழுத்தோழர்கள் மற்றும் பலருடன் சேர்ந்து செராவும் 'செகந்தராபாத் சதி வழக்கில்' கைது செய்யப்பட்டார். (ஒன்பது ஆண்டுகளாக அந்த வழக்கு இன்னும் நீதி மன்றத்திலேயே உறங்கிக் கொண்டிருக்கிறது.) உடனடியாக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். எட்டு மாதங்களுக்குப்பின் ஜாமீனில் வெளிவந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

1975ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தெலுங்கு வருடப் பிறப்பன்று அரசு நடத்திய உலகத் தெலுங்கு மாநாட்டை எதிர்த்து ஸ்ரீ.ஸ்ரீ ஆகியோருடன் கைதானார். 1975ஆம் ஆண்டு ஜூன் 26ம் நாள், உள்நாட்டில் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட தினத்தன்று இவரும் விரசம் அமைப்பைச் சேர்ந்த 34 பேர்களும் மிசாவின்கீழ் கைது செய்யப்பட்டனர். சிறையிலிருந்த பொழுது 1976 ஆகஸ்ட்டில் கல்கத்தா பிரசிடென்சி சிறையிலிருந்து பலநக்சல்பாரிக் கைதிகள் தப்பி விட்டதால் செராவுக்கும், மற்றவர்களுக்கும் சிறையில் கொடுக்கப்பட்டிருந்த வசதிகள் மேலும் குறைக்கப்பட்டன. இந்தக் காலகட்டத்தில்தான் அவரது உடல் நலம் சிதையத் தொடங்கியது. முதலில் அல்சர் நோய் தோன்றியது. பிறகு அடிக்கடி தலைவலிவர ஆரம்பித்தது. பின்னால் அது மூளையில் கட்டியாக உருவாகியது. ஆனாலும் அவர் மார்ச் 77ல், அவசர நிலை நீக்கப்பட்ட பிறகுதான் விடுதலையானார். தமது வேலையில் திரும்பவும் அமர்த்தப்பட்டார். ஆனால் அதையடுத்த மூன்றாம் நாளே காவல்துறை உயர் அதிகாரியின் தூண்டுதலில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். 1977ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மூளைக் கட்டிக்காக முதல் முறையாக அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். 1979 நவம்பர் 3ம் தேதியும் 19்1 ஜூலை 28ம் மேலும் மூளைக்கட்டி பரவி புற்றுநோயாக ஆகிவிடாமல் இருப்பதற்காக மேலும் இருமுறை அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

செகந்திராபாத் சதி வழக்கை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறும் அவரை மீண்டும் வேலையில் அமர்த்துமாறும் நாடெங்கிலும் இருந்து கோரிக்கைகள் எழுந்தன. ஆனாலும் 1980ஆம் ஆண்டு மார்ச் மாதம் செராவும் மற்றொரு சிறந்த கவிஞரான 'லோச்சன்' என்பவரும் இந்திய குடியுரிமைச் சட்டம் பகுதி 311 பிரிவு 2(c)யின் கீழ் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தச்சட்டப்பிரிவின் கீழ் அரசு யாரையும், எவ்விதக் காரணமும் இன்றி தேசப் பாதுகாப்பைக் கருதி வேலை நீக்கம் செய்ய முடியும். ஆனால் 5 மாதங்களுக்குப் பின்னால் உயர்நீதி மன்றத்தால் வேலை நீக்க உத்தரவு செல்லா தென்று அறிவிக்கப்பட்டது. செரா தனது வேலையை மீண்டும் பெற்றார்.

அத்தனை நாட்களும் கீழ்நிலை ஆரம்பப்பள்ளி ஆசிரியருக்கான குறைவான சம்பளத்தில் பாதித்தொகையையே பெற்று வந்தார். அதுவும் பல சமயம் ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை. 1979-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் விரசம் இவருக்காக உதவி நிதி திரட்டத் தொடங்கியது. இதன் மூலம் செரா நாடு முழுவதும் அறிமுகமானார். இதில் கிடைத்த சுமார் 40,000 ரூபாய்க்கு மேல் சிறு, சிறு நன்கொடைகளாக வந்தனவாகும். படிப்பாளிகள், எழுத்தாளர்கள் மாணவர்கள் மட்டுமல்லாமல், பெண்களும், ஏழை கிராம மக்களும் கூட நன்கொடை அளித்தனர்.

கரீம் நகர் மாவட்டம், மாந்தானி வட்டத்தைச் சேர்ந்த கஜுலாபள்ளி கிராம மக்கள் பொருளாகக் கொடுத்தனர். ராஜமுந்திரியைச் சேர்ந்த ஒரு நடுத்தர வர்க்கத்துப் பெண்மணி செராவின் பாடல்களால் தானடைந்த மாற்றத்திற்குக் காணிக்கையாக பணம் அனுப்பியிருந்தார். நன்கொடை கொடுத்தவர்களின் பெயர்பட்டியல் மாதம் தோறும் விரசத்தின் பத்திரிக்கையான 'அருணதாராவில்' பிரசுரிக்கப்பட்ட போது தான் தெலுங்கு இலக்கியத்திலேயே என்றும் இல்லாத அளவிற்கு எல்லா பிரதேசங்களிலும் எல்லா வகுப்புகளிலும், செரபண்டராஜு புகழ்பெற்றிருந்தது தெரியவந்தது.

தனது படுமோசமான ஏழ்மையிலும் கூட தனது பாடலை திரைப்படத்திற்காக விலைக்கு கேட்டபொழுது மறுத்து விட்டார். ஆந்திர மாநில சாகித்திய அகாடமி ஆயிரம் ரூபாய் நன்கொடை அளிக்க முன்வந்தபொழுது அதையும் மறுத்துவிட்டார். இவைதான் அவர் சுய



படிப்பகம்

www.padippakam.com

நினைவுடன் செய்த இறுதிச் செயல்களாகும். ஏனென்றால் விரைவிலேயே அவரது உடல்நலம் மோசமடைந்தது. புற்று நோய் மூளையை வெகுவாக பாதித்தது. ஒவ்வொன்றாக அவரது கைகால்கள் குரல், கண்கள், இறுதியாக சிந்தனையாற்றல் அனைத்தும் அழிந்து போயின. கடைசி ஒரிருமாதங்கள் இதயமும், நுரையீரல் மட்டுமே வேலை செய்தது. அவர் மனிதன் என்றே சொல்ல முடியாத நிலையை அடைந்த பொழுதுதான் மனிதாபிமான காரணங்களுக்காக அவர் மேல் இருந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. அப்பொழுது 1982-ம் ஆண்டு ஜுன் மாதம் ஆகும். அதிலிருந்து ஒரு மாதத்திற்கு பின் 1982-ஆம் ஆண்டு ஜுலை 2-ம் நாள் மரணமடைந்தார்.

மரணத்தில்தான் புரட்சிக் கவிஞரின் மீது பூசப்பட்டிருந்த களங்கங்கள் துடைக்கப்பட்டன. மரணச் செய்தி, அதுவரை 'விரசம்' என்று ஒன்று இருப்பதையே அங்கீரிக்காத அகில இந்திய வானொலியிலும் ஒலிப்பரப்பாகியது. 'செரா'விற்கு நிதி கேட்டு விடுத்த வேண்டுகோளை வெளியிட்டதற்காக தனது பத்திரிகை ஊழியர்களைக் கண்டித்த ராம்நாத் கோயாங்கோவின் தெலுங்கு நாளேடுகூட மறைவு குறித்து ஒரு தலையங்கம் எழுதியது. இந்திரா காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான, மிக அதிக எண்ணிக்கையில் அச்சாகும் ஒரு வார இதழ், மிகச் சிறந்த டல அஞ்சலிகளை வெளியிட்டது. விஜயவாடா முழுவதும் பதிப்பகங்களும், புத்தகக் கடைகளும் அவருக்கு மரியாதை தெரிவித்து மூடப்பட்டன. எல்லாவற்றையும் விட முக்கியமானது, அவரது இறுதிச் சடங்கு அவரது விருப்பம் போலவே நடந்தது. சுமார் 5000 க்கும் மேற்பட்டோர் பின் தொடர அவரது நண்பர்கள் செராலின் உடலை 'விரசம்' கொடியால் மூடிச் சுமந்து சென்றனர். சிதை நெருப்பு கத்தாரால் மூட்டப்பட, அவரது குழுவினர் உணர்ச்சி ததும்பப் பாடினர் ''மலைகளையே பிளந்திட்டோம்.''



படிப்பகம்

www.padippakam.com

இறுதியாக, கவிஞரின் வாழ்வில் நடந்த சில அசாதாரண நிகழ்ச்சிகளையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 1955-ல் தனக்கு 'செரபண்டராஜு' என்று பெயர் சூட்டிக் கொண்டார். அதன் சரியான பொருள்" சிறைக்கல்லின் ராஜா 'என்பது'கும். தெலுங்கானா பழங் கதைகளின் கதாநாயகனின் பெயர் அது. மாறி, மாறி சிறையிலடைக்கப்பட்டு, அவர் உண்மையிலேயே 'செஞ்சலகுடா' சிறைக்கற்களின் 'ராஜாவாகி விட்டார். "எனது மனித உலகிற்குள் அவர்களை நடமாட வைப்பேன்" என்று 1967ல் எழுதினார். அவரது கவிதைகள் உண்மையிலேயே ஆந்திராவின் நகர்ப்புறமெங்கும் விவசாயிகளின் வாழ்வைப்பற்றிய விழிப்புணர்வைப் பரப்பின. 1971-ல் எழுதினார்."

"இந்த நாட்டின் விடுதலைக்கு விதைகளாக
எனது ரத்தத்தைத் தெளிப்பேன்
சொட்டுச் சொட்டாக"

அவ்வாறே வாழ்ந்தும் காட்டினார். 1972ல் 'விரசம்' அமைப்பின் செயலாளர் அறிக்கையில் இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார் "அரசியல் புற்று நோய்க்கான இந்த மருத்துவமனையில் திசை அறியாமலேயே மடிந்து விடாதீர்கள்" அவரே செகந்திராபக் காந்தி மருத்துவ மனையில் புற்று நோயால் இறக்கும் பொழுது தன்னுடைய திசை வழியில் உறுதியாக இருந்தார். "எனது வாழ்வு முடியும் பொழுதுதான் இந்தத் தாகமும் முடியும்" என்று 1975-ல் எழுதியவர் தனது மரணப் படுக்கையிலும் தாகம் தீராமல் எழுதிக் கொண்டிருந்தார்.

"எதிரி வந்து என்கரத்தை வெட்டிவிட்ட போதிலும்
விட்டுவிடா வீரவாளைப் பற்றி நிற்கும் விரல்களே."

என்று 1980ல் எழுதிய வண்ணமே தனது கால்கைகள் செயலிழந்த பின்னும் எதிரியுடன் சமரசம் செய்து கொள்ள மறுத்தார். தன்னுடைய கவிதைகளைப்போலவே வாழ்ந்



படிப்பகம்

www.padippakam.com

தார், கவிதைகளில் தனது வாழ்வை முன்கூட்டியே அனுமானித்தார் என்றுதான் கூறவேண்டும். தனது வாழ்வின் மேலும், சாவின் மேலும் கவிஞனின் இறுதி வெற்றி இதுதான்.

அதனால் தான் அவரது வாழ்க்கையே அவரது மிகச் சிறந்த கவிதையாகிறது. மக்களுக்காக அவர் வடிவமைத்த இனிமையான அத்தனை பாடல்களைக் காட்டிலும், இந்த எழுதாத கவிதைதான் தனது இயற்கையான நடையாலும், வடிவத்தின் சிறப்பாலும், தலையாயதாக நிலைக்கும். எனவே, நாம் அவரது மரணத்தைக் கண்டு கண்ணீர் சிந்த வேண்டாம், கைகொட்டிப்பாடுவோம், களிப்போடு ஆடுவோம்:

''மலைகளையே பிளந்திட்டோம்''

படிப்பகம்

www.padippakam.com

## குற்றவாளிக் கூண்டிற்கு வரவிடுங்கள் என்னை !

ஒரு நாட்டிற்குள்ளோ ஒரே கோர்ட்டுக்குள்ளோ
கருப்புக் கோட்டுக்களாலோ
கரன்சி நோட்டுக்களாலோ
தீர்ந்துவிடும் வழக்கல்ல
என்வழக்கு
குற்றவாளிக் கூண்டிற்கு வரவிடுங்கள் என்னை !

அடுத்தவர்கள் சொல்வதை நம்பி
அம்மாவென் றொருத்தியை அழைப்பதைத் தவிர
யாருக்கடா தெரியும் ? நான் கேட்கிறேன் !
தன்னைப் பெற்ற தாய் யாரென்று ?
ஆம் ! படைத்தவனையே பரிகசிக்கும்.
திமிர் பிடித்தவன் நான்.
கேள்வி கேளுங்கள், உங்களை, நீங்களே!
நான் சொல்வதும், சொல்லப் போவதும்
சொல்லிக் கொண்டிருந்ததும் இதுவே

மானுடத்தில் எனக்கிருந்த நம்பிக்கையைச் சிதைத்து
,கடவுள் சாட்சியாக' ஏனடா ஆணையிடச் சொல்கிறீர்கள்?
குற்றவாளிக்கும் அப்பாவிக்கும் ஒரேசட்டம் பேசி
சகதியில் சுண்டெலியை அமுக்குவது போல்
வக்கீல் பீசில் நீதியையே அமுக்கிவிடும் நீங்கள்
என்ன தகுதியிலடா எனக்கு நீதிபதி யானீர்கள் ?
குற்றவாளிக் கூண்டிற்கு வரவிடுங்கள் என்னை !

எடுத்துக் கொள்ளுங்கள்
பேனாக்களையும் பேப்பர்களையும்
எழுதிக் கொள்ளுங்கள் என் சந்தேகங்களையும்;
செல்லரித்த உங்கள் சட்டப் புத்தகங்களில்



படிப்பகம்

www.padippakam.com

மனிதனின் அவன் ரத்தத்தின்–உயிரின் விலை என்ன?
ஆணு, பெண்ணு என்ற வேற்றுமையையும்
அவரவர் சிந்தனைகளையும் தவிர
கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள்
மதங்கள், மதகுருக்கள் என்று
இத்தனை வேறுபாடுகள் ஏனிருக்கவேண்டும்?
அறியாப் பயங்களோ அனைவருக்கும் ஒன்றுதான்
எந்த நாடானாலும் இந்த மண் ஒன்றுதான்
அன்னை யாரானாலும் அவள் முலைப்பால் இனிப்புத்தான்
முகங்கள் ஏனடா களையிழந்து போயின?
என்னை பைத்தியக்காரனாக ஜோடிக்கும்
உங்கள் வழக்கினைத் தொடங்குங்கள்
குற்றவாளிக் கூண்டிற்கு வரவிடுங்கள் என்னை !

உணவளித்த வீட்டிலேயே ஓராயிரம் குறைகள்காணும்
என்னுள் இருக்கும் பாரம்பரியத்திற்கு
என்னதான் நேர்ந்திருக்கும்?
நல்இதயங்களின் நறுமணங்கள்
அகிலம் முழுவதும் பரவியே தீரும்!
இனிவரும் தலைமுறை நிச்சயமாக
இவற்றை எல்லாம் அங்கீகரிக்கும்!
உலகப் பிரளயத்தை ஓலமிடும் பாடல்களின்
வேதனைச் சுடர்கள் விண்ணுயர எழுகின்றன!
ஒவ்வொரு அணுவிலும் கட்டுக் கடங்காமல்
பற்றி எரிகிறது செந்தீயின் நாக்கு!
குற்றவாளிக் கூண்டிற்கு வரவிடுங்கள் என்னை !

தீர்ப்பும் உனது; சிறையும் உனது;
பிறகென்னடா அச்சம்?
பாழடைந்த உங்கள் அறிவு மாடங்களில்
நிறைந்திருப்ப தெல்லாம்
ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்
வளர்ந்த பாசிகள்தான் !



படிப்பகம்

www.padippakam.com

குடும்பப் பாசமென்ற கூரையில் பதுங்கி
தட்டுத் தடுமாறி உயிர்வாழும் புறாக்குஞ்சுகளே
அந்தப் பாசம்கூட இன்று
அணுஅணுவாகச் செத்துக்கொண்டிருக்கிறது

நீங்களே ஏனடா
உங்கள் தலைகளை வெட்டி எறியக்கூடாது?
அறையின் நான்கு சுவர்களேயும் தகர்த்தெறிந்து
நான்கு திசைகளாக்கி
நன்றாகப் பாருங்கள்...
உங்களால் ஏன் உலகக் குடிமகனாக
ஆக முடியாதென்று!

எனக்குத் தெரியும்
உங்கள் இரவு ஆடைகளைப் பகலிலும்
பகல் ஆடைகளை இரவிலும் அணியமாட்டீர்கள்
உங்களது மனைவிமார்களோ பைத்தியங்கள்
இருபத்தி ஐந்து ரூபாய்ச் சேலைகளில்
சொர்க்கத்தையே காண்பவர்கள்...
ஆடம்பரப் பொருட்களுக்காக
அறிவையே அடகு வைத்தவர்கள்...
அழுகிப்போன வாரிசுகளான
உங்கள் குழந்தைகள்
நாகரீகமாக்கப்பட்ட செயற்கையின்
நடமாடும் மாடல்கள்...
போங்கள், ஓடுங்கள் இங்கிருந்து;

யாரடா நீங்கள் ?
எங்களேப் பார்த்து ஏனடா சிரிக்கிறீர்கள் ?
நாங்கள் எதுவாக ஆனாலும்
உங்களைப் போல் மட்டும் ஆகிவிடக்கூடாது.
சுற்றியிருப்பவர்கள்
உங்களையும் எங்களையும்
ஒன்றாக எண்ணிவிடக்கூடாது



படிப்பகம்

www.padippakam.com

உங்களது இதயங்களும்
எங்களது இதயங்களும்
ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல்
இறுக மூடப்பட்ட மலைக்குகைகள்
குற்றவாளிக் கூண்டிற்கு வரவிடுங்கள் என்னை !

ஆம்; குற்றவாளிக் கூண்டிற்கு
வரவிடுங்கள் என்னை !
இந்த வாழ்க்கையில்-
பரந்து விரிந்த உலகில்-
எந்த மூலையிலாவது
உண்மையிலேயே நீதிவழங்கும்
நீதிமன்றம் ஒன்றிருந்தால் !

மலைபோல் குவிந்துள்ள சந்தேகங்கள்
இதயத்தையே கசக்கிப் பிழிகின்றன!
உலக சமாதானமே நமது லட்சியம்!
ஆனால்.......அது
போர்களில்தான் அடங்கியுள்ளதா ?
மனிதன் சதைப் பிண்டமாக, குழந்தையாக
பிறக்காத நாடு எதுவும் உண்டா ?
பின்,
நாடுகளாகப் பிரிவினை செய்வதில்
பொருள் என்ன ?
இரவு நேரத்தில், பள்ளியறைகளில்
எங்கெங்கும் நடப்பது ஒரே கதைதானே!
இந்த உலகமே ஒரு நிர்வாணக் கற்பகிவம்
உங்கள் இறைவன்—நான் அடித்துச் சொல்கிறேன்
ஒரு நிர்வாணப் பிரியன்!
நான் சொல்வதும் சொல்லப் போவதும்
சொல்லிக் கொண்டிருந்ததும் இதுவே
எனவே
குற்றவாளிக் கூண்டிற்கு வரவிடுங்கள் என்னை.

(மே, 1965)



படிப்பகம்

www.padippakam.com



ஓ! எனதருமைத் தாய்நாடே!
அன்னையும் நீயன்றோ, அப்பனும் நீயன்றோ
தேடி வரம்கொடுக்கும் தெய்வமும் நீயன்றோ
சமுதாய விரோதிகளின் சயன அறைதேடிச்
சல்லாபம் புரிகின்ற கற்பன்றோ உன்கற்பு
உறுப்புக்கள் அத்தனையும் உலகத்தின் சந்தையிலே
அடமானம் வைத்துவிட்ட அழகன்றோ உன்அழகு
சீமான்கள் அரவணைப்பில் சிந்தை பறிகொடுத்து
இன்துயிலில் ஆழ்ந்துவிட்ட இளமையன்றோ உன் இளமை
கண்டவர்கள் உன்முகத்தில் காரி உமிழ்ந்தாலும்
கலக்கமே கொள்ளாத போதையன்றோ உன்போதை
கோடானு கோடியிங்கு கூழின்றிச் செத்தாலும்
பசுமையே மாறாத நாடன்றோ உன்நாடு
பொன்விளையும் பூமிதனைப் புல்லர்களின் கூட்டமிங்கு
வயலெலியாய்த் தோண்டி வளத்தை உறிஞ்சுகையில்
அஞ்சிப் பதுங்கிநிற்கும் அன்பின் திருஉருவே
நீயன்றோ பாரதத்தாய்
பாரதத்தாய் வாழ்க! பாரதத்தாய் வாழ்க!!
உன்மானம் காத்திருந்த ஒற்றைத் துணிகூட
கொடிகளாய் மாறியதால் கோமகளே கிராமமெலாம்
அம்மணமாய் அலைகின்ற வீரமன்றோ உன்வீரம்
கடன்வாங்கிக் கட்டிவிட்ட மாளிகையில் காலெரிந்த
பூனைபோல் அஞ்சி, அஞ்சி நடைபோட்டு
பதுங்கிச் செல்கின்ற பரிதாபம் உனதன்றோ
பசியாலே துடிதுடித்துப் பதறும் குழந்தைகட்கு
பால்சுரக்க மாட்டாத பாலையன்றோ உன்மார்பு
இரவல் நகைபூண்டு இரவினிலே தெருவோரம்
பரத்தையாய் அலைகின்ற மினுக்கன்றோ உன்மினுக்கு
ஓ பாரத மாதாவே !
உன் பயணத்தின் இலட்சியம்தான் என்ன ?
பாரதத்தாய் வாழ்க! பாரதத்தாய் வாழ்க!!

(ஜூன், 1968)

படிப்பகம்

www.padippakam.com

## இனியும் ஒருமுறை இந்தநாடு ஏமாற்றப்படக் கூடாது

இனியும் ஒருமுறை இந்தநாடு ஏமாற்றப்படக் கூடாது !
பிர்லா மாளிகையில் ஆடம்பரப் பூஜை நடத்தும்
ஹரேராம் பிச்சைக்காரர்கள்
மீண்டும் இங்கே பிறந்துவிடக் கூடாது !
பகவத்கீதைப் பண்டிதர்கள் இந்த நாட்டிற்கு
இனியும் தேவையில்லை
போலிப் புத்தனின் வாரிசுகள் அள்ளிவீசிய
வெற்று முழக்கங்களால் நாசமாய்ப் போயின
இருபது ஆண்டுகள் !
பொறுமையாய் அமைதியாய் சாந்தமாய் வாழ்ந்ததால்
எந்தன் தலைமுறை எத்தனை இழந்தது ?
சாதாரண மனிதர்கள், ஒதுக்கப் பட்டவர்கள்
மக்கள் நலம் பேணுமிந்த மாபெரும் நாட்டில்
செத்துக் கொண்டிருக்கிறார்கள் தினம் தினம்.
வீடுகள் குடிசைகளாகிக் கொண்டிருக்கின்றன...
குடிசைகள் தரைமட்டமாகிக் கொண்டிருக்கின்றன...
பணக்காரர்களோ தேசத்தையே கசக்கிப் பிழிந்து
வானுயர வளர்ந்து கொண்டிருக்கின்றனர்.
அறியாமை இருட்டினால் வழிகாண முடியாமல்
அழுகிக் கொண்டிருக்கும் கிராமங்களோ
கதறிக் கொண்டிருக்கின்றன பரிதாபமாக !
இன்று
தனது சீடகோடிகளின் சாதனைகளைக் கேட்டறிந்து
அவன் தலைகுனிந்து நின்று கொண்டிருக்கிறான்-
நசுக்கப் பட்டவர்களின் நீதிமன்றத்தில்
ஒரு கொலைகாரனைப் போல், குற்றவாளியைப் போல்!



படிப்பகம்

www.padippakam.com

பட்டினிப் பட்டாளங்களின் விழிகளில் மின்னிய
நம்பிக்கைக் கதிர்கள் மாயமாய் மறைந்துவிட்டன
பாலைவனத்தின் வழித்தடங்களைப் போல !
காற்றால் பிய்த்து எறியப்பட்ட நம்பிக்கைக் கூடாரங்கள்
இடிந்தே கிடக்கின்றன எத்தனையோ காலங்களாய்
பொறுத்திருந்தே தேய்ந்துபோன எலும்புக் கூடுகள்
இனி இணைந்து எழுந்து வெட்டி எறியவேண்டும்.
இந்த இருட்டுமரத்தை,கோடாரிகளால்,கொடுவாட்களால்
அழுதழுதே சோர்ந்தது இருபத்தியிரண்டுவருட வரலாறு

வாய்திறவாமலேயே அது தெளிவாகச் சொல்கிறது
ஒடுக்கப்பட்டவர்களுக்காக அவன் பாடுபடவில்லை
வர்க்க உணர்வின் இதயத்தில்
வஞ்சகமாகக் கத்தி பாய்ச்சிய,
போராட்ட சக்தியையே அழித்தொழித்துவிட்ட,
இந்த முதல்தர ஐந்தாம்படை
உலகிற்குத் தந்ததுதான் என்ன ?
இவனை நம்மிடையே வாழ எவ்வாறு அனுமதிப்போம் ?
அதிகாரத்தின் கேடயமாக ! ஊழலின் கவசமாக !
இந்த நாட்டிற்காக அவன் என்னதான் கொடுத்தான்
கரடு முரடான ஒரு கைத்தறித்துணியைத் தவிர.
ஊளையிடும் வகுப்புவாத வெறிநாய்களுக்கும்
பசுத்தோல் போர்த்திய புலிகளுக்கும்
இந்த நாட்டையே தியாகம் செய்துவிட்டு
பகவத்கீதைப் பாராயணம் செய்துகொண்டிருந்த
இவனுக்கு, இனியும் இந்த நாட்டில்
ஒரு பெயரும், உருவமும்
எப்படி இருக்கலாம் ?

பாராளுமன்றப் பரத்தையர் விடுதிகளில்
நடந்தேறும் அரசியல் விபச்சார அவலங்கள்;
இவன் தந்த வரமின்றி, வேறுயார் தந்தது ?
இவனது பெய்ரை உச்சரிக்காத ஒரு கட்சித் தலைவன்
இன்று எவனாவது உண்டா ?



படிப்பகம்

www.padippakam.com

இவனது சிலையைச் சுமக்காத வீதிகள்
இன்று எங்காவது உண்டா ?
மூளை குழம்பிய இந்த மகாத்மாவிற்கு
ஏனித்தனை ஆடம்பர ஆராதனைகள்?
கனிவான கீர்த்தனைகள், கண்ணீர் அஞ்சலிகள்,
வழிபாட்டு மாடங்கள், மாமலைகள்
நமது அறியாமையின் சின்னங்களல்லாமல்
இவை அனைத்தும் வேறென்ன ?

இந்த சபர்மதி ஆசிரமவாசி
சாமியாருமல்ல சாதாரண மனிதனுமல்ல
ஆசிரியனுமல்ல அறிவாளியுமல்ல
அரசனுமல்ல அரசியல் அறிஞனுமல்ல
தத்துவ அறிஞனுமல்ல அறியாத மூடனுமல்ல
மக்களுக்காகப் கவலைப் பட்டவனுமல்ல
அதற்காக அவர்களைச் சும்மா விட்டவனுமல்ல
அவன் வெறுமே வளர்ந்துக்கொண்டே யிருந்தான்
அவனே அனைத்தும் போலவும்
அனைத்தும் அவனே போலவும்

கற்பனா வாதச் சிலந்தி வலைகளில்
வெற்று முழக்கங்களில்
காட்டு மிராண்டிக் கலாச்சாரப் புனைகதைகளில்
மக்களைச் சிக்க வைத்து
கோட்பாடுகள் என்ற பெயரில்
பஞ்சு உருண்டைகளை நூற்றெடுத்தான்
விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாத துரோகியாக
மக்களைக் காட்டிக் கொடுத்தான்
தான் சாவதற்குமுன், என் தலைமுறைக்காக
வெறும் பூஜ்யங்களைத்தான் வரைந்து சென்றான்
இனியும் ஒருமுறை இந்த நாடு
ஏமாற்றப் படக்கூடாது (1970)



படிப்பகம்

www.padippakam.com

# நமது கிராமத்திற்கு அவர்கள் மீண்டும் வருகிறார்கள்

நமது கிராமததிற்கு
அவர்கள் மீண்டும் வருகிறார்கள்
கிளிமொழி பேசும் வல்லூறுகள்
ரத்தவேட்டைக்குப் புறப்பட்ட
கழுகுக் கூட்டங்கள்

கனவுகளின் மறுபெயரான பச்சை மரங்களே
விழிகளில் விளையாடும் நம்பிக்கை மலர்களே
குழந்தைகளே, கண்ணின்மணிகளே, எச்சரிக்கை

இருபது ஆண்டுக் காயங்களால்
உள்ளம் கொதித்த சூரியன்
ஒவ்வொரு வீட்டுக் கதவையும்
இப்பொழுதுதான் தட்டத் தொடங்கியுள்ளான்
சினமே மாறாத செந்தீயின் சுடர்களுடன்

அகல விரித்த இறக்கைகளுடன்
தங்களது இரும்பு அலகுக்ளையும்
எஃகு நகங்களையும்
புதிய இலைகளால் மூடிக்கொண்டு—
சுரண்டும் வர்க்க தேசபக்திப் பாடல்களை—
வானமெங்கும் பாடிக்கொண்டு—
அழுகிப்போன வாக்குறுதி விதைகளை
வாய்நிறைய அசைபோட்டுக் கொண்டு—
எங்கெங்கும் நமக்காக கண்ணிகள் வைத்துவிட்டு
வல்லூறுகள் வந்து கொண்டிருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

ரத்தவெறி பிடித்த கழுகுக் கூட்டங்கள்
வந்து கொண்டிருக்கின்றன
மெல்லிய விடியல்களே, சிந்தனைகளே, எச்சரிக்கை

கொடூரமாக
மக்களின் உயிர்களைப் பறித்துக் கொண்டு
சில்லறைப் பாடல்களில் இதயங்களை விலைபேசி
மக்களுக்குத் துரோகமிழைக்கும்
பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள்
சிலைகளையும் சீமான்களையும் பாடி
காலத்தைப் பின்னோக்கித் தள்ளும்
கிளிமொழி பேசும் வல்லூறுகள்
ரத்தவெறி பிடித்த கழுகுக் கூட்டங்கள்
நமது கிராமத்தை நோக்கி வருகின்றன
மீண்டும் ஒருமுறை.

அவர்களுக்கு இந்த கிராமத்தில்
கூடுகள் உண்டு; கோபுரங்கள் உண்டு
நமது வீடுகளோ இடிந்து கிடக்கின்றன-
உள்நாட்டு எதிரிகளின் கொடுங்கரங்களால்!
ஆனாலும் எனது நண்பர்களே, பிள்ளைகளே
எதிரிகளின் கூடார உச்சியிலேயே
சுரண்டுபவர்களின் குடலுக்கு அடியிலேயே
போராட்டப் பாறைகளை அடித்துச் செல்லும்
சிவப்பு இருக்கும்பொழுது
அது கிராமம் கிராமமாகப் பரவும்பொழுது
நமக்கு என்ன அச்சம்?

இந்த வானம், பூமி, கிராமம், அதன் பெயர்
அனைத்தும் நமக்கே சொந்தம்
ஏழைகளின் இதயத்தின் அடித்தளத்திலிருந்து
எந்த சக்தியாலும் சிவப்பை அழிக்கமுடியாது



படிப்பகம்

www.padippakam.com

உழைப்பவர்கள் அடிவயிற்றைத் தாக்கும் எவரையும்
அது எரித்துச் சாம்பலாக்குகிறது
இந்தக் கூட்டங்களின் சதிகள் அனைத்தையும்
அது அம்பலமாக்குகிறது.
கிளிமொழி பேசும் வல்லூறுகள்
ரத்தவெறி பிடித்த கழுகுக் கூட்டங்கள்
நமது கிராமத்திற்கு மீண்டும் வருகின்றன.
விடியல்களே, சிந்தனைகளே எச்சரிக்கை
குழந்தைகளே, கண்மணிகளே எச்சரிக்கை.

(ஜனவரி 27, 1971)



படிப்பகம்

www.padippakam.com

# கொல்லு உலை
# கொளுந்துவிட்டு எரியுது

கொல்லுஉலை கொளுந்துவிட்டு எரியுது—நல்லாத்
துருத்தியிலும் காத்து நெரம்பி வழியுது.
அணைஞ்சிடாம காக்கவேணும் அண்ணாச்சி-பொழுது
விடிஞ்சபின்னும் தூங்கலாமோ அண்ணாச்சி

அக்கம்பக்க வயலைப்பாரு அண்ணாச்சி-அவங்க
ஏருபூட்டி உழவுதொடங்கி நாளாச்சி
காலுங்கையும் ஓய்ஞ்சிருக்கும் நேரமா-கடந்து
போச்சுன்னுக்க போனபருவம் திரும்புமா

குடியிருக்க குடிசை வேணும்
பயிருசெழிக்க உரம் வேணும்
வண்டிக்காலும் தேய்ஞ்சுபோச்சு அண்ணாச்சி-புதுசா
பட்டம் ஒண்ணும் போடவேணும் அண்ணாச்சி

வடக்கே இடி இடிக்கும் போது
வானம் மூடிக் கருக்கும் போது
சிவப்புமின்னல் வெடிக்கும்போது அண்ணாச்சி-கலப்பை
மம்பட்டி எல்லாம் தீட்டிக்கணும் அண்ணாச்சி

கதிருவீடு சேருமுன்னே அண்ணாச்சி-திருட்டு
காக்கைவருது கழுகுவருது அண்ணாச்சி
கவட்டைவில்லை கையிலெடு அண்ணாச்சி-கவட்டை
கல்லுவிடு சரஞ்சரமா அண்ணாச்சி

நீ பெத்த புள்ளையெல்லாம் இரும்புதான்-ஆனா(ல்)
சண்டைவந்தா இரும்புகூட துரும்புதான்
பகல்தூக்கம் மறந்துவிடு அண்ணாச்சி-இரும்பை
ஆயுதமா மாத்திவிடு அண்ணாச்சி



படிப்பகம்

www.padippakam.com

ஓட்டுப்போடும் வயசுவந்த மகளுக்கு-கல்யாணப்
பாட்டுக் கேட்க வழியில்லை அண்ணாச்சி
கூலிவேலை வருஷமெல்லாம் செஞ்சாலும்-பொண்ணுக்கு
குடுக்களன்ன சேர்த்துவச்சே அண்ணாச்சி

சட்டதிட்டம் இருக்குதுன்னு சொன்னாங்க-நிலத்தை
பட்டாஎழுதித் தருவமின்னும் சொன்னாங்க
பட்டாநம்பி காலெவச்சே நிலத்திலே-போலீசு
பட்டாளத்தை அனுப்பிவைச்சான் விரட்டவே.

குத்தகைக்கு நெலம்குடுத்தவன் கண்ணுதான்-கொதிச்சு
சிவக்குதன்னே குத்தகைநெல்லு பாக்கிக்கு
கடன்கொடுத்த பெரியமனுசன் கண்ணுதான்-கணக்கு
பண்ணுதண்ணே உன்பொண்டாட்டி உடம்புக்கு

மக்களுக்கு உதவுறேன்ன சர்க்காரு-மாறி
மக்களையே தாக்குதன்னே ரவுடியா
மனசொடிஞ்சு போயிடாத அண்ணாச்சி-மக்கள்
யுத்தத்திலே நிலைச்சுநில்லு அண்ணாச்சி

கொல்லுஉலை கொழுந்துவிட்டு எரியுது-நல்லா
துருக்கியிலும் காத்துநெரம்பி வழியுது
அணைஞ்சிடாமக காக்கவேணும் அண்ணாச்சி-பொழுது
சாயும்வரை காத்திருக்கக் கூடாது

மம்பட்டா கலப்பை எல்லாம் அண்ணாச்சி-நல்லா
கூறுபாத்து தீட்டிவைக்கணும் அண்ணாச்சி
மக்கள்யுத்தப் பாதையிது அண்ணாச்சி-துணிஞ்சு
மரணம்வரை பார்க்கவேணும் அண்ணாச்சி.

(ஏப்ரல், 1971)



படிப்பகம்

www.padippakam.com

## தீயின் மைந்தர்கள்

எனது சகோதரியே
கருவிழிகளைக் கண்ணீரால் நிறைக்காதே
இந்த ஆற்றை நீ
தனியேதான் கடந்தாக வேண்டும்
சின்னாபின்னமாகச் சிதைக்கப்பட்ட
வாழ்க்கைகளின் மிச்சசொச்சங்களுக்கு
நம்பிக்கைச் சுடராய்த் திகழவேண்டிய
என் சகோதரியே
நாளைய விடியல்களுக்கு நல்வரவு
கண்ணீர் அருவிகளால் கூறாதே

நன்றாகப் பார் என் சகோதரி
துளிர்விடும் இந்த மதலைகள்
இதயம் உடைந்து இறந்து விடுவார்கள்
நாளை பழுத்துக் குலுங்கப் போகும்
இந்நாட்டு மரங்கள் அல்லவா அவர்கள்
பூச்சிகளை அழிந்தொழிக்க இவர்கள்
எதையும் தாங்கும் இதயத்துடன்
வளர வேண்டியது அவசியம்
போராட்டத்தையே உயிர்மூச்சாக சுவாசிக்கும்
இவர்கள். இந்த மண்ணில் தோன்றிய
நெருப்பின் மைந்தர்கள்
உனது பைத்தியக்காரப் பாசத்தால்
பாலுடன் கோழைத்தனத்தை ஊட்டிவிடாதே
உற்சாகமிழந்து மௌனவிரதம் பூண்டுவிடாதே
''அப்பா யாரம்மா'' என்று அவர்கள் கேட்டால்



படிப்பகம்

www.padippakam.com

நியாயம் கேட்டு நடந்த போரில்
மக்களுக்காக மடிந்த மாவீரன் என்றுசொல்
அந்த மாவீரர்களுக்கு மக்கள் பாடும்
வீரவணக்கத்தையே
தாலாட்டாகப் பாடச் சொல்

சகோதரி
தந்தையைக் கொன்றவன் யாரென்று கேட்டால்
தயங்காமல் சுட்டிக் காட்டு
தனிமனிதனை அல்ல-
தறிகெட்ட சமுதாய அமைப்பை!
கொலை செய்த துப்பாக்கிகளைப் பற்றிக் கூறு
அவைகள் ஆட்சியாளரின் கரங்களிலிருந்தால்

போராடும் மக்களின் கரங்களிலிருந்தால்
கட்டப்பட விருக்கும் சமுதாயத்தின்
தன்மைகளை விளக்கிச் சொல்

கருப்பையில் மறைந்திருக்கும்
புரட்சியின் வெற்றிகளைப் பற்றி
விளக்கமாய் எடுத்துரை
கருமேகங்களைக் கண்டு சிறகுவிரிக்கும்
கம்பீரமான மயில்களைப் போல்
பெருமிதம் மிக்க பாதையில்
தந்தையின் பெருமைகளை நெஞ்சிலேந்தி
அவர்கள் சென்றிட
ஓர் வழிகாட்டியாக நில்

நீயே ஒரு பல்மலைக் கழகமாகிவிடு
அவர்களது ரத்தக்குழாய்கள் அனைத்திலும்
போராட்டப் பாடங்களை நிறைத்துவிடு
கோட்பாடுகளை ஒப்பிக்கச் சொல்லி
சிந்தனைகளுக்கு விலங்கிட்டு விடாதே



படிப்பகம்

www.padippakam.com

ஏழைகளின் பாதையில் கருணைக் கடலாக
எதிரிகளின் பாதையில் கனலும் நெருப்பாக
வர்க்க உணர்வை அனுபவத்துடன்
மீண்டும் மீண்டும் ஒருங்கிணைத்து
கவனமாக முன்னேறச் சொல்
ஒருபிடி சோறு கூட
உழைத்துக் களைத்தபிறகே கொடு
குடிப்பதின் தீமைகளை
கூறுவதே சிரமம் என்பதைச் சொல்
உழைப்பாளிகள் காலடியில் உலகமே பணியும்வரை
ஓய்வு ஒழிவின்றி முனனேறச் சொல்
சோம்பேறிகளும்
கூலி வாழ்வில் நிம்மதி காண்பவர்களும்

அரை நொடி வாழவும் அருகதையற்றவர்கள்
என்பதையும் தெளிவாகச் சொல்
தங்களது தத்தையைவிட
இரண்டு அடிகளாவது இவர்கள்
அதிகம் செல்லவேண்டும் என்பதையும்
வாழ்க்கையை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு
இவர்களை நீ பாலூட்டி வளர்த்ததையும்
சொல்லிவிடு சகோதரி, மறக்காமல்
இதையும சொல்லிவிடு
இவர்களை நீ ஈன்றெடுத்ததே
புரட்சிக்காகத்தான்.

(சிறை, ஆகஸ்ட், 1971)



படிப்பகம்

www.padippakam.com

# எனது துயரங்களை பாறைகளிடம் போய்ச் சொல்வேனோ?

கூலிக்காகக் குரல் கொடுத்தான்
குற்றம் சாட்டினர் நக்சல்பாரி என்று
சுட்டுக் கொன்றனர் இரக்கமின்றி

ஐயோ எனது துயரங்களை
பாறைகளிடம் போய்ச் சொல்வேனோ—
நானே கல்லாய்ச் சமைவேனோ

பள்ளிப்படிப்பு படித்து விட்டால்
பிள்ளை வாழ்வு உயர்ந்திடுமாம்!
படிக்க மகனை அனுப்பிவிட்டால்
குடிக்கக் கஞ்சி யார் தருவார்?

ஐயோ எனது துயரங்களை
பாறைகளிடம் போய்ச் சொல்வேனோ—
நானே கல்லாய்ச் சமைவேனோ

நாள் தவறாமல் குடும்பம் முழுதும்
முதுகெலும்பொடிய உழைத்தாலும்
நாளைப் பொழுது கஞ்சிக்கு
நாதியில்லை என்செய்வோம்?

ஐயோ எனது துயரங்களை
பாறைகளிடம் போய்ச் சொல்வேனோ-
நானே கல்லாய்ச் சமைவேனோ



படிப்பகம்

www.padippakam.com

கடனில் மூழ்குதல் ஆபத்தாம்
தவறாம் பாவமாம் சொல்கின்றனர்
நாங்கள் கடனில் மூழ்காவிட்டால்
நாளைப் பொழுது விடியாதே
ஐயோ எனது துயரங்களை
பாறைகளிடம் போய்ச் சொல்வேனோ —
நானே கல்லாய்ச் சமைவேனோ

ஐப்பசி மாத அடைமழையில்
வீடே குளமாய் மாறிவிடும்
படுத்து உறங்கத் துணையாக
பாம்பும் தவளையும் வந்துவிடும்
ஐயோ எனது துயரங்களை
பாறைகளிடம் போய்ச் சொல்வேனோ —
நானே கல்லாய்ச் சமைவேனோ

எந்தன் மகளோ வயதுக்கு வந்தும்
என் வீட்டிலேயே இருக்கின்றாள்
ண்ணையாரோ பேரமாக
புடவை ரவிக்கை அனுப்புகிறான்
ஐயோ எனது துயரங்களை
பாறைகளிடம் போய்ச் சொல்வேனோ —
நானே கல்லாய்ச் சமைவேனோ,

ஆற்றில் குதித்து அழிவேனோ —
ஆறாய் நானே ஆவேனோ
தூக்கில் தொங்கி மடிவேனோ —
தூக்குக் கயிறாய் ஆவேனோ
ஐயோ எனது துயரங்களை
பாறைகளிடம் போய்ச் சொல்வேனோ —
நானே கல்லாய்ச் சமைவேனோ.

(மார்ச். 1, 1970)



படிப்பகம்

www.padippakam.com

## எங்களில் ஒருவன் நீ!

எங்களில் ஒருவன் நீ! எங்கள் மனிதன் நீ!
வயிற்றுப் பிழைப்புக்கே போலீஸ்காரன் ஆனாய் நீ!
உயிரைக் கொடுத்துப் போராடுபவர்கள்
உந்தன் சகோதரர்! அவர்
நெஞ்சைத் தானா குறிபார்க்க வேண்டும்
உந்தன் தோட்டாக்கள்?

எங்களில் ஒருவன் நீ! எங்கள் மனிதன் நீ!
வயிற்றுப் பிழைப்புக்கே போலீஸ்காரன் ஆனாய் நீ
ஆனால் அருமைச் சகோதரா-உன்
வாழ்வும் ஒரு வாழ்வா?

சாவை நோக்கி நாட்களை எண்ணும்
வயதான பெற்றோர்கள்-
கல்லும் மண்ணும் சுமந்தே தேயும்
தம்பியர் தங்கைகள்-
வறுமைத் தீயில் குடல்கள் கருகி
பசியால் இறந்தாலும்
நாட்டுக்காக உயிரைக் கொடுப்பவர்
உந்தன் சகோதரர்கள்
அவர் நெஞ்சைத்தானா குறிபார்க்க வேண்டும்
உந்தன் தோட்டாக்கள்? (எங்களில்...

ஆனந்தங்களும் ஆடம்பரங்களும்
சிலரின் சொந்தங்கள்!
கோடானு கோடி மக்களின் சொந்தம்
நோய்கள், பஞ்சங்கள்!



படிப்பகம்

www.padippakam.com

அதனாலன்றோ போராடுகின்றார்
ஏழை, எளியோர்கள்!
அவரது பக்கம் அன்றோ உன்னையும்
சேர்த்திட விரும்புகிறார்! (எங்களில்...

ஆசை பாசம் அனைத்தும் உண்டு
ஒவ்வொரு மனிதனுக்கும்-
அதனைச் சொல்ல உரிமையில்லை
உந்தன் வேலையிலே-
இந்த வாழ்க்கை எதற்கு என்பதை
நீயும் உணர்ந்திடடா!
இந்தப் போலி அரசாங்கத்தை
விட்டுத் தொலைத்திட்டா! (எங்களில்...

கொள்ளையர் கூட்டம் நாட்டை ஆளும்
இந்தக் காலத்தில்-
உந்தன் இதயம் கண்ணீர்க் கதையாய்
மாறிப் போனதடா!
வீடும் இல்லை தோட்டமும் இல்லை
உனக்கென்று உலகத்திலே-
சந்தேகமில்லை எங்களைப் போலே
நீயும் ஏழையடா!
ஏழை ஆயினும் எந்திரம் ஆகத்
தேவையில்லையடா! (எங்களில்...

கொலை செய்யாதே கொலை செய்யாதே
உந்தன் உறவின்ரை!
ஏழை மக்களின் தோழர்கள் இன்று
காட்டில் வாழுகின்றார்!
ஏய்த்தே வாழும் கழுகுக் கூட்டம்
நாட்டை ஆளுகின்றார்!
உன்னை அழைத்து உந்தன் கையில்
துப்பாக்கி கொடுத்தவர்கள்-
மக்களின் எதிரி என்பதை மட்டும்
மறந்து விடாதே நீ! (ஜூன் 1972)



படிப்பகம்

www.padippakam.com

## கூலி உழவன் பாட்டு

ஏர் உனக்கு சொந்தமில்லை
மாடு (உ)னக்கு சொந்தமில்லை-
ஏர்முனையும் சொந்தமில்லை-
தாரு குச்சி சொந்தமில்லை-

வயலைப்பத்திப் பேச்சு என்னடா-? இரும்பு
கலப்பைப் பத்திப் பேச்சு என்னடா?

வெள்ளைக்காளை சொந்தமில்லை-
மச்சக்காளை சொந்தமில்லை-
மாட்டுக்கூடம் சொந்தமில்லை-
வைக்கோல்போரும் சொந்தமுல்லை-

வயலைப் பத்தி பேச்சு என்னடா-இரும்பு
கலப்பை பத்தி பேச்சு என்னடா?

ஊண்மாய்க்கரை சொந்தமில்லை-
கருவமரம் சொந்தமில்லை-
மம்பட்டியும் சொந்தமில்லை-
மாந்தோப்பும் சொந்தமில்லை-

வயலை பத்திபேச்சு என்னடா? இரும்பு
கலப்பை பத்தி பேச்சு என்னடா?

கேணியும் உன் சொந்தமில்லை
குளமும் உன் சொந்தமில்லை-
பூாலுனக்கு சொந்தமில்லை-
பயிருகூட சொந்தமில்லை-

வயலைப் பத்திபேச்சு என்னடா?-இரும்பு
கலப்பைப் பத்திபேச்சு என்னடா?



படிப்பகம்

www.padippakam.com

வான்மழையும் சொந்தமில்லை
வாய்க்காலும் சொந்தமில்லை
அரிவாளும் சொந்தமில்லை
அறுவடையும் சொந்தமில்லை

வயலைப் பத்தி பேச்சு என்னடா?-இரும்பு
கலப்பைப் பத்தி பேச்சு என்னடா?

மேகங்கள் சொந்தமில்லை
பருவங்கள் சொந்தமில்லை
மேய்ச்சல் நிலம் சொந்தமில்லை
களத்து மேடும் சொந்தமில்லை

வயலைப் பத்தி பேச்சு என்னடா-?இரும்பு
கலப்பைப் பத்தி பேச்சு என்னடா?

மிதிபட்ட புழுப்போல நீயிருக்கும் வரையினில்
மாற்றமும் வருவ தில்லையடா-நீங்க
இல்லாமப் போனாக்க எள்ளுகூட முளைக்காது
என்பதைத் துணிஞ்சு சொல்லிடடா
எல்லோரும் ஒண்ணாகி எதிர்த்துப் நின்று போராடி
முன்னேறிச் செல்லனுமடா-இங்கே
கூலி உரிமை அல்ல நிலத்தில் உரிமை உண்டு
எல்லோர்க்கும் என்று சொல்லடா
ஏரைப்பத்தி பேச்சு என்ன வயலைப்பத்தி பேச்சு என்ன
ஊருக்கே ராசா நீயடா
பாடுபட்டும் வாழ்க்கையெல்லாம் கண்ணீர் விட்டு
நின்னதெலாம்
பழையகதை ஆகிப் போகு(ம்)ன்டா

(10-ஜுன்-1972)



படிப்பகம்

www.padippakam.com

## போய் விடாதே அந்த வழி
## போகலாம் வா இந்த வழி

போய் விடாதே அந்த வழி! போகலாம் வா இந்த வழி!
கடலின் வேகம் கண்டு நடுங்கி-பாய் நழுவி
கடலில் நீயும் மூழ்கிவிடாதே.

போய் விடாதே அந்த வழி! போகலாம் வா இந்த வழி!
அலையின் சீற்றம் பார்த்து இமைகளை-படபடத்து
சுக்கானை-விட்டு விடாதே.

போய் விடாதே அந்த வழி! போகலாம் வா இந்த வழி!
தியாகச் சுடர்கள் சங்கமமன்றோ-இக்கரைதான்
செங்கதிரின் தாயகமன்றோ.

போய்விடாதே அந்த வழி! போகலாம் வா இந்த வழி!
வீசும் தென்றல் நாளைய கனவு-இக்கரையில்
துளிர்ப்பதுவோ ஒளியின் கீற்றுகள்

போய் விடாதே அந்த வழி! போகலாம் வா இந்த வழி!
துயரங்களும் கானல் நீர்களும் - தொடராத
வரலாறு அழைக்கிறதே வா.

போய்விடாதே அந்த வழி! போகலாம் வா இந்த வழி!
வெற்றி கொண்ட வீரனிங்கு பார்-அவன் இதய
குரலொலியில் சுடரொளியைப் பார்.

போய்விடாதே அந்த வழி! போகலாம் வா இந்த வழி!
மரணம் எங்கும் ஒளிந்திருக்குதே-நடந்து செல்ல
மரணமில்லா இக்கரைக்கு வா.

போய்விடாதே அந்த வழி! போகலாம் வா இந்த வழி!
சுருக்குக் கயிற்றில் சிக்கித்தவிக்கின்ற அக்கரைதான்
நரகமன்றோ அசுரர் நாடன்றோ.

போய்விடாதே அந்த வழி! போகலாம் வா இந்த வழி!
சமத்துவமும் அன்பும் சுரக்கும்-மானுடத்தின்
மார்பகத்தில் பால் குடிக்கவே.

(ஜூலை 23, 1972)



படிப்பகம்

www.padippakam.com

# நான் தான் இந்தியப் புரட்சி

ஓ! துளிர் விடும் இலையே! சொல்வாய், சொல்வாய்
போர்க் காயங்களுடன் உன் நிழலைத் தேடிவரும்
செம்படை மறவர்களுக்காக
எத்தனை பூங்காற்றை உன்னால் வீச முடியும்?
ஓ! கடந்து செல்லும் மேகமே! நீ சொல்.
இந்த மண்ணின் மைந்தர்களின்
காய்ந்த தொண்டைகளின் கதறலை நிறுத்த
எத்தனை நீரை உன்னால் பொழிய முடியும்?
ஓ! நிலவுப் பெண்ணே! நீயும் சொல்லி விடு!
போர் பயிற்சிபெறக் கூடியிருக்கும்
எங்கள் விவசாய இளைஞர்களுக்காக
எத்தனை நேரம் உன் இன்னொளியை தரமுடியும்?
ஓ! புதர்களே! வாய் திறந்து பேசுங்களேன்!
எங்களது கவசமும் கேடயமும் நீங்கள் தான்
செஞ்சேனையின் காலடித் தடங்களைக் கண்டறிய
அவர்கள் உங்களை வெட்டி எறிந்தாலும்
மீண்டும் வளர்ந்து விடுங்கள் முன்னிலும் அடர்த்தியாக

ஓ! எனதருமை ஒத்தையடிப் பாதையே!
சொன்ன சொல் தவறிவிடாதே!
காக்கிச் சட்டைகளை ஆற்றுப் பக்கம் அழைத்துச் செல்
மூழ்கடிப்பதற்கு; நாய்களை விரட்டி யடிப்பதற்கு!
ஓ மான் அன்னையே!
வேட்டைக் காரனின் வலையில் சிக்குவதை விட
செம்படை வீரனின் அம்புக்கு வீழ்ந்து
தியாகியாகி விடுவது மேலல்லவா !
சுரண்டல் கூட்டங்களை எதிர்த்து
போர்ப் பாதையில் செல்லும்
உழைக்கும் வர்க்கத்தின் சொர்க்கம் நான்
நான் தான் இந்தியப் புரட்சி
இதுவே சரியான நேரம்
ஆயுதம் தாங்கி உதவி செய்ய-ஆம்!
ஆயுதம் தாங்கிய உதவிக்கு.

(நவம்பர் 17, 1977)



படிப்பகம்

www.padippakam.com



ஒவ்வொருவர் தலையிலும் ஓர் இமயம்-
ஒவ்வொரு காலடியிலும் ஒரு சஹாரா-
இந்த உலகம் முழுவதும்!
போரை நினைத்து அஞ்சி நடுங்கி
புண்களாக வெடித்துக் கொண்டிருக்கிறது-
பூமகளின் பொன்மேனி!

பைத்தியகாரப் பறவையைப் போல
அழுகிப்போன மேடைப்பேச்சு விதைகளை
பொறுக்குவதற்காக-
மேடைக்கு மேடை பறந்து திரியாதே!
நீ சந்திக்கும் ஒவ்வொரு மடையனுக்கும்
வரவேற்புரை வழங்கி
சுய இன்பம் தேடிக் கொண்டிராதே!
உன் பார்வையாளர்கள் உன்னை
மன்னிக்கவே மாட்டார்கள்!
போலீஸ் அதிகாரக் காசநோயை
பரப்பிக் கொண்டிருக்கின்றன-
அரசியல்வாதிக் கழுகுகள்.
நினைவில் வைத்துக் கொள்.
சாகடிக்கப் படாமல்
அவை சாகமாட்டா!
அச்சமும் அடிமைத் தனமுமே
வாழ்க்கையல்ல
அறிவு ஜீவிகளின் பரிவு ததும்பிய
புறக்கணிப்பை மன்னித்துவிடாதே.
அவர்களை நம்பிவிடாதே.

நினைவில் வைத்துக் கொள்!
ஒளிமயமான உன் லட்சியத்தை
ஒரு போதும் நழுவவிடாதே!
உன் உயிரை விலை கொடுத்தாவது -
உலகிற்கு அதனைப் பரிசாகக் கொடு!



படிப்பகம்

www.padippakam.com

## புரட்சிக் கிராமங்கள்

கணகணக்கும்
காளைகளின் கழுத்து மணியிலா?
அடி நடக்க மடி சுரக்கும் எருமைகளின்
சங்கு கோத்த கழுத்துக் கயிறுகளிலா ?
மயக்குகிற ஓசையிலா ?
கருக்கரிவாள் கைப்பிடியிலா ?
கோடாரிக் காம்புக் துறைகளிலா ?

யோவ்
எங்கே நீ தேடிடுவாய் ?

தலை சாய்ந்து கிடக்கும்
செழுமையான நெல்தாள்களில்,
முற்றிப் பருத்த கதிர்களில்,
பசுக்களின் குளம்புகளில்,
மறிகளின் குட்டை வாள்களில்,
சேவல்களின் கொண்டைப் பூக்களில்

யோவ்
எங்கே நீ தேடிடுவாய்?

யாரைத்தான் கைது செய்வாய்?
ஆலமரப் பொந்துகளில்,
சுருண்டு தொங்கும் விழுதுகளில்,
ஈச்ச மரக் கொண்டைகளில்,



படிப்பகம்

www.padippakam.com

கள்வடியும் முட்டிகளில்,
பனந்தோப்பில், குறும்புதரில்
பைத்தியக்காரனே!

அலைந்து திரிந்து திரும்பிப் போ -
மைல் கணக்கில் நீண்டு செல்லும்
உழவு சால்களில்,
உணவுப் பொதிகளில்,
சிக்கி முக்கித் தீப்பொறியில்,
குன்றுச் சரிவில்,

ஆடு மாடு மேய்ப்போர் குரலில்,
மண் மேடுகளின் இடைவெளியில்,
எங்கணுமே எதிலுமே
தேடய்யா, தேடு -

எங்கள்
காடுகளின் கருவறையில்
உறுப்பதையும், வெட்டி வெட்டித்
தேடய்யா தேடு.

குழந்தைகளின் அரைஞாண் முடிச்சில்,
கோயில் அர்ச்சனை மலரிதழ்களில்,
கரிசல்மண் வெடிப்புகளில்
சிரிப்பினிலும் அழுகையிலும்
விருந்துண்ட இலைகளிலும்

யோவ்,
தேடய்யா தேடு,
ஓடி ஓடித் தேடு.



படிப்பகம்

www.padippakam.com

பெண்களின் பின்னல்களில்
ஆண்களின்
புதுச் செருப்புக் கிறீச்சொலியில்
சுடுகாட்டு மண்டை ஓட்டில்
தேடய்யா தேடு,
பைத்தியமாய்த் தேடு.

ஆயிரம் படைகள் வந்தபோதிலும்
மயிரளவேனும் இரகசியம் வராது
புரட்சிக் கிராமம் இது.
வந்த பாதையில் திரும்பிப் போய்விடு.
நீ
வீட்டுக்குப் போவாயோ மாட்டாயோ
யார் அறிவார்?

பார்!
அங்கே பார்
இல்லை, இங்கே பார்,
வாலை முறுக்கி,
குளம்புகளால் இடியொலித்து,
கொம்புகளால் குறிபார்த்து
அணிவகுத்து நடைபோடும்
அந்த இளம் காளைகளைப்பார்.
கரு மேகம் போல் திரண்டு
நூறுகளாய் நாக்கு தொங்க
அலைகின்ற என் கிராம
கருப்பு நாய்கள்

அதோ பார்!
தேனீயைக் களைத்தவர் யார்?
நானறியேன்.



படிப்பகம்

www.padippakam.com

அவை
குண்டு மழை என்
முரல் ஒளி எழுப்பிய
பரவுதல் பாராய்
குன்றுகளிலிருந்து
வரிசையாய் ஒருடலாய்
கரும் புலிகளென வருகின்ற
அச்சமற்ற மறிகளைப் மார்.

இங்கே
கர்ப்பக் குழத்தையும்
புரட்சிக்கு
நீ
உயிரோடு தப்பி விட்டால்
உன்னை ஆள்கிறவர்க்கு
எடுத்துச் செல் இச் செருதி-
''கிராமங்கள் விழித்தெழுகின்றன.''



படிப்பகம்

www.padippakam.com

## கிராமம் மாறலையே..!

வண்டியிழுத் தோங்க பீடிப்புகையில் இருமிக்கிட்டே!
தண்ணி இறைச்சோங்க எங்க ஆயுசு பூராவும்!
கிராமம் மாறலையே-எங்க குறைகள் தீரலையே!

இந்தக் கரையில்தான்-இந்த மரத்துக்குக் கீழே தான்-
காலு ஒடிஞ்சு காய்ச்சலாக் கிடந்து அப்பா செத்தாரு!
பண்ணைச் சாமிமாறலையே-வேற சாமியும் காக்கலையே!

பெண்டு புள்ளை நெனைப்பை மறந்து
ஆடுமேச்சாங்க- பண்ணைக்கு- மாடு மேச்சாங்க
எத்தனை உழைச்சும் வாழ்கை-காய்ஞ்ச

இலையைப் போலங்க
எதுவும் நிச்சயம் இல்லைங்க
நாலு காலு ஜீவனாய் நானும் மாறிடேனுங்க

வாயை மூடிட்டேனுங்க.
ஏழையை ஏழை சாப்பிடுறாண்டா இந்த கிராமத்திலே-
ஐயோ
கண்ணுக் குட்டியை பசுவே திங்குது இந்தக் காலத்திலே

மனுசனை மிருகமா மாத்தற ஆட்சி
இனியும் வேணாண்டா-தம்பி
இதையும் மாத்தணுண்டா

கத்தியை தீட்டு புத்யதைத்தீட்டு
காட்டுக்குள் ஒளிஞ்சுக்கடா-அவதான்
இனிமேல் அன்னைய!



படிப்பகம்

www.padippakam.com

## மலைகளையே பிளந்திட்டோம்

மலைகளையே பிளந்திட்டோம்
பாறைகளை பிழிந்திட்டோம்
இரத்தத்தையே கலவையாக்கி
அணைகளையே கட்டினோம்
உழைப்பு யாருது?
செல்வம் யாருது? [மலை]

காடுகளை வெட்டினோம்
நிலங்களையே உழுதிட்டோம்
வேர்வை சிந்தி ஏர் உழுது
பயிரினையே வளர்த்திட்டோம்
விளைச்சல் யாருக்கு?
அலைச்சல் யாருக்கு? [மலை]

கைத்தறிகளை அமைத்திட்டோம்
இழை இழையாய் பினனினோம்.
நரம்பினையே நூலாக்கி
துணிகளையே நெய்திட்டோம்
துணிகள் யாருக்கு?
குளிரு யாருக்கு? ]மலை]

எந்திரத்தை இயக்கினோம்
உற்பத்தியை பெருக்கினோம்
உழைப்பு என்னும் மின்சாரத்தில்
ஆலைகளை நடத்தினோம்
மாடி யாருது?
குடிசை யாருது? [மலை]

காரணங்கள் அறிந்திட்டோம்!
ஆயுதங்கள் ஏந்திட்டோம்!
போரினையே நிறுத்தாமய்
புரட்சியினை நடத்துவோம்!
சாவு உனதடா!
வெற்றி எமதடா!! [மலை]



படிப்பகம்

www.padippakam.com



காற்றோடு ஒருசேதி கேட்டேன்!
வயலோரம் வீசிக் கொண்டிருந்த
தென்றலுக்கு ரத்தம் சூடேறிவிட்டதாம்!
கூழாங்கற்கள் உயிர் பெற்று துடிக்கின்றனவாம்!
காய்ந்த குச்சிகள் கம்பீரமாக நடக்கின்றனவாம்
நன்றாய் விரிந்த நெஞ்சோடு!
எங்கள் ஊர் என்ன எரிமல்லி ஆய்விட்டதா!
பேராற்றில் புதிய அலைகள் எழுந்து விட்டனவா!!

காற்றோடு ஒரு சேதி கேட்டேன்!
சீறி எழுகின்றனவாம் சிற்றெறும்புக் கூட்டங்கள்...
ஓடி ஒளிகின்றனவாம் இருட்டறைக்குள் வெளவால்கள்...
வாசலைத் தாண்ட வழியின்றித் தவிக்கின்றனவாம்
படமெடுத்து வந்த பாம்புக் கூட்டங்கள்...
எனது கிராமத்தின் இதயத்தில்
வெஞ்சினம் கிளறிவிடப் பட்டதா!
மலைப் பாம்புகளின் மாபெரும் சக்தி
இன்று மாயமாகி விட்டதா!!

காற்றோடு ஒரு சேதி கேட்டேன்!
செடிகளும், மரங்களும் செம்படை மறவர்க்கு
கனிகளை வாரிக் களிப்புடன் தந்தனவாம்!
வெள்ளாடும் தீம்பாலை வேண்டும்வரை தந்தனவாம்!
மலைகளும் காடுகளும் மறைவிடம் தந்தனவாம்!
என்கிராமம் ஈன்றெடுத்தது ஒளியின் புதல்வர்களையா ?
அவர்களை அடிவயிற்றில் ஒளித்துக் கொண்டு
ஆனந்தக் கனவில் மூழ்கிவிட்டாளா!!



படிப்பகம்

www.padippakam.com

காற்றோடு ஒரு சேதி கேட்டேன்!
முதலைகள் முறையிடுகின்றனவாம் ஆறு சதி செய்வதாக!
ஆறு அசைகின்றதாம் வாள்போன்ற அலைவீச்சுடன்!
காய்வெட்டும் கத்திகளும் இன்று
அடுப்படி விட்டு அமர்க்களம் சென்றதாம்!
அங்குசபுரம் இன்று அங்குசமாகி விட்டதா!
அலைகளின் அதிரடியில் கரைகள்
அஞ்சி உடைகின்றனவா!!

காற்றோடு ஒரு சேதி கேட்டேன்!
எங்கள் ஊரின் வானத்தில்
கரு மேகங்கள் கூட்டம் போடுகின்றனவாம்...
மின்னல் கத்திகள் அவற்றை வெட்டிவீசுகின்றனவாம்.
இடியின் முழக்கத்திற்கு அஞ்சி நடுங்கி
கூனல் மேகங்கள் கலைந்தோடுகின்றனவாம்...
எங்களது கிராமமெங்கும் இடிமழை பெய்கின்றதா!
உளுத்த குட்டிச்சுவர்கள் உடைந்து உதிர்கின்றனவா!!

காற்றோடு ஒரு சேதி கேட்டேன்!
அடுத்த கிராமங்களில்கூட
செம்பாடல்களின் முணுமுணுப்புக் கேட்கிறதாம்!
எளியோரின் சிவப்பு இரத்தம்
நல்ல கருஞ்சிவப்பாய் மாறிவிட்டதாம்!
அனைத்து கிராமங்களும் செந்தீயின்
அரவணைப்பில் வீழ்ந்து விட்டனவாம்!
எனது கிராமமும் புரட்சித்தீயில் நீராடுகிறதா!
எனது அன்னையும் போர்க்கொடியை ஏந்திவிட்டாளா!!

(மே - 1974)



படிப்பகம்

www.padippakam.com

## உரிமை

மரங்களை வெட்டாதீர்கள் என்று
நான் சொல்லமாட்டேன்
அவைகளுக்கு உயிர் உண்டு
என்ற போதிலும்...

ஓலைகளைப் பறிக்காதீர்கள் என்று
நான் சொல்லமாட்டேன்
இயற்கைக்கு
அவை எழில் சேர்த்த போதிலும்..

கிளைகளை உடைக்காதீர்கள் என்று
நான் சொல்லமாட்டேன்
கிளைகளே
மரங்களின் கரங்கள் என்றாலும்

ஏனென்றால்
எனக்கு
ஒரு குடிசை வேண்டும்.

(1980)



படிப்பகம்

www.padippakam.com

## ஏதய்யா எங்கள் ஜாதி

ஏதய்யா எங்கள் ஜாதி?
எதுவய்யா எங்கள் குலம்?

மண்ணைப் பிசைந்து செங்கல் வெட்டி-
உனக்காக நாங்கள் வீடுகட்டிய பொழுது-
காலி வயிற்றுடன் நிலத்தை உழுது-
உனக்காக நெற்குவியல்களைச் சுமந்த பொழுது

ஏதய்யா எங்கள் ஜாதி?
எதுவய்யா எங்கள் குலம்?

புகைப் போக்கிகளைப் போல் அடிவயிற்றிலிருந்து
வெப்பத்தையும் புகையையும் கக்கிக் கொண்டே
காசநோயுடன் இருமி இளைத்துக் கொண்டே
நிலக்கரி மலைகளை நாங்கள் தோண்டிஎடுத்தபொழுது

ஏதய்யா எங்கள் ஜாதி?
எதுவய்யா எங்கள் குலம்?

தீய்ந்துபோன மிச்ச மீதிகளைத் தின்று கொண்டு
நன்செய் வயல்களை நாங்கள் சீராக்கிய பொழுது
கொதிக்கும் வெயிலில் உடல்கருக நின்று
கற் சிலைகளை நாங்கள் செதுக்கிய பொழுது-

ஏதய்யா எங்கள் ஜாதி?
எதுவய்யா எங்கள் குலம்?

நாங்கள் விலங்குகளைக் கொன்று
உங்களுக்காகச் செருப்பு தைத்த பொழுது-
உண்ண ஒரு பிடி சோறு மில்லாமல்
உங்களுக்காக பானைகள் வனைந்த பொழுது-

ஏதய்யா எங்கள் ஜாதி?
எதுவய்யா எங்கள் குலம்?



படிப்பகம்

www.padippakam.com

உங்கள் கடவுளுக்கு மலரேந்திச் செல்ல
ஒய்யாரக் கூடைகளை நாங்கள் பின்னியபொழுது—
ஓராயிரம் முறை ஸ்ரீராமஜெயம் எழுத
கட்டுக்கட்டாய் காகிதங்கள் செய்தபொழுது—

ஏதய்யா எங்கள் ஜாதி?
எதுவய்யா எங்கள் குலம்?

நீங்கள் சாமியார்களாவதற்காக உங்கள்
தலைகளை நாங்கள் மொட்டை அடித்த பொழுது-
தும்பைப் பூப்போல் உங்கள் துணிகளை
அழுக்குப் போக நாங்கள் வெளுத்த பொழுது-

ஏதய்யா எங்கள் ஜாதி?
எதுவய்யா எங்கள் குலம்?

அழுகிக் கொண்டிருக்கும் உன் பழங்கதைகளை
நாங்கள் இனியும் நம்ப மாட்டோம்!
துருப்பிடித்து உளுத்துப்போன உன் தேர்
உடைந்து போனது, இனிமேல் நகராது

ஏதய்யா எங்கள் ஜாதி?
எதுவய்யா எங்கள் குலம்?

ஓராயிரம் சாதிகளாய், ஒவ்வொரு சாதிக் குள்ளும்
ஓராயிரம் குழுக்களாய் எங்களைப் பிரிக்கின்றாய்!
ஆனால், உழைக்கும் வர்க்கமாகிய நாங்கள்
ஒன்றிணைந்து கை கோர்த்து நின்றால்—

ஏதய்யா எங்கள் ஜாதி?
எதுவய்யா எங்கள் குலம்?

(செப்டம்பர் 1, 1975)



படிப்பகம்

www.padippakam.com



எனது சிந்தனைகளின் அழுத்தம்
பதிந்திருக்கும் என்ற சந்தேகத்தில்
போலீஸ்காரர்கள் பின் தொடர்கிறார்கள்
என் நிழலை அழித்து விடுவதற்காக...

வானத்தைச் சற்றுநான் வெறித்து நோக்கினால்
உடனே அளந்து பார்க்கிறார்கள்
என் பார்வையின் ஆழத்தையும், உயரத்தையும்...

புரட்சிப் பாடல்களின் போர்த் தந்திரங்களை
அதன் அடிகளை மட்டம் பிடித்துப் பார்க்க
எனது காலடி மண்ணைப் பாதுகாத்து
பரிசோதனைக்கு அனுப்புகிறார்கள்...

உனக்கும் எனக்கும் உணவு தரும் இதயங்களை
உலக மனிதாபிமானத்தின் ஒளிக் கீற்றுக்களை
அழித்துவிட முயல்கிறார்கள்...

எனக்கு ஒரு குரல் இருப்பதே குற்றம்;
சிந்தனை இருப்பதே அராஜகம்;
அப்படியே இருந்தாலும் அவை-
என்னுடையவையாக இருந்து விடக்கூடாது.

ஏனென்றால்
அவர்களது பாடலுக்கு நான் பல்லவியாகவில்லையாம்!
அவர்களது பல்லக்குத்தூக்கியாக நானும் மாறவில்லையாம்



படிப்பகம்

www.padippakam.com

என்னைத் துரோகி என்று அழைக்க
அவர்கள் காட்டும் ஒரே அளவு கோல்
நாள்தோறும் ஓதவேண்டிய அவர்களது வேதமான...
அரசியல் நிர்ணய சட்டம் !

அனைத்துக் கும்பல்களுக்கும் உள்ள
அடிப்படை முட்டாள்தனம் சாரத்தில் ஒன்றுதான்
அனைத்துச் சுரண்டும் வர்க்கக் கூட்டங்களின்
அரசியல் நிர்ணய சட்டங்களின் புனிதப்பணி
தங்களது வர்க்கத்தைப் பாதுகாப்பதுதான்!

உழைக்கும் மக்களின் வாழ்க்கையின் அழகை
உணர்த்துவதே என்பாடலின் இலட்சியம்!
எந்த மதத்திற்கும் சுரண்டல், பாதைக்கும்
பல்லவியாக நான் இருக்க மாட்டேன்!

இந்த நாட்டின் விடுதலைக்கு விதையாக
எனது ரத்தத்தைத் தெளிப்பேன்
சொட்டுச் சொட்டாக...

சிறையிலிருந்தாலும்
நான் அடிமையல்ல!
என்னை உலுக்கி எடுத்தாலும்
துண்டு துண்டாக வெட்டினாலும்
நான் மீண்டும் மீண்டும் எழுவேன்
அலைகளைப் போல...

**(1977)**



படிப்பகம்

www.padippakam.com

## வாள் கவிதை

துள்ளிவரும் மரணத்தையும்
எள்ளி நகை யாடுவேன்!
எதிரில் எந்தன் எதிரி வந்தும்
துச்சமாகப் பேசுவன்!

நோய்கள் வந்து பாயில் என்னை
வீழ்த்தி விட்ட போதிலும்—
நோவு கண்டு அஞ்சிடாமல்
தொடர்ந்து வாளை வீசுவேன்!

எழுதுகோலும் குரலும் எந்தன்
உயிர்க்கு நிகர் சத்தியம்!
எந்தன் வாழ்க்கை என்றுமிந்த
மக்களுக்கே அர்ப்பணம்!

போராட்டம் - போராட்டம் -
போராட்டம் - திசைவழி!
பாடல்களே - பாடல்களே -
பாடல்களே - உயிர்மூச்சு!

கண்ணீரைக் கண்டு உள்ளம்
கரைந்து நின்ற போதிலும் -
ஆற்றின் போக்கில் அடித்துப்போக
என்னைநானும் விட்டிடேன்!



படிப்பகம்

www.padippakam.com

எதிரிவந்து என்கரத்தை
வெட்டிவிட்ட போதிலும் -
விட்டுவிடா வீரவாளை
பற்றிநிற்கும் விரல்களே!

தூக்குக் கயிற்றை முத்தமிட்டு
கவிதை ஒன்று சொல்லுவேன்!
கொல்லவந்த கயிறுகூட
பல்லவிகள் பாடிடும்!

போராட்டப் பாதையிலே
போர்மறவர் சாகலாம்!
போராட்டம் சாவதில்லை
இறுதி வெற்றி அதற்குத்தான்!

இறந்தகாலம் எத்தனைதான்
இருள் நிறைந்த தாயினும்—
எதிர்காலம் எமதென்றே
நம்புபவன் மனிதனாம்!

இந்த இரவு மெல்ல மெல்ல
எரிந்து காற்றில் கரைந்திடும்!
வைகறையும் மெல்ல மெல்ல
வானில் நாளை புலர்ந்திடும்!

(அக்டோபர், 1980)



படிப்பகம்

www.padippakam.com



மக்கள் சீனத்தின் ஒளியில்
நடைபயிலும் நக்சல்பாரிக் குழந்தைகளான
நாங்கள் தான்-
போல்ஷ்விக்கின் வாரிசுகள்!!

ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்காகப்
போராடும் ஏழைகளான
நாங்கள் தான்-
ஸ்ரீகாகுள விவசாயிகளின்
கரங்களில் மின்னும் போர்வாட்கள்!

மக்கள் யுத்தப் பாதைக்குப்
பல்லவி பாடும் கவிஞர்களான
நாங்கள் தான்-
இறவாப் புகழ் பாணிக்ரஹியின்
இளைய சகோதரர்!

புரட்சியைச் சதியென்று அழைக்கின்ற
புல்லர்களுக்கு சமாதி கட்டும்
நாங்கள் தான்-
ஆளும் வர்க்கங்களை வீழ்த்தப் போகின்ற
ஆயுதமேந்திய மறவர்கள்!

(1974)



படிப்பகம்

www.padippakam.com

## புரட்சிப் போரின் காலமடா.

புரட்சிப் போரின் காலமடா...போர்
செய்தால் வெற்றி நமதேடா...

சோதனை போதும் தோழர்களே-வீண்
வேதனை யாலே சாகாதீர்
ஆயுதம் ஏந்திப் போரிடும்-மக்கள்
அணியில் இன்றே சேர்ந்திடுவீர்

மக்கள் யுத்தம் மடைதிறந்தாற் போல்
திக்குகள் எட்டும் பரவட்டும்-அதில்
சிக்கியே சுரண்டும் வர்க்க நீதிகள்
சிதைந்தே மண்ணில் புதையட்டும்

உயிரையும் தியாகம் செய்திட அஞ்சா
உரமுடையோனே நம் தோழன்...
பகைவனுக் கிரங்கல் பாவமென்றே-மொழி
பகர்ந்திடு பவனே நம் நண்பன்!

மக்கள் உரிமைகள் மறுத்திடு மிந்த
போலீஸ் ராஜ்யமோர் போலியடா!-மெய்
நீதியைச் சட்ட ஒழுங்கின் பெயரால்
நீதி மன்றங்கள் கொல்லுதடா!

தூக்கு மேடையும் சிறைக்கதவும்-செஞ்
சூரிய ஒளியைத் தடுத்திடுமா?-பெரும்
மாறுதல் வேண்டிப் போரிடும் மறவர்
மனஉறு தியைத்தான் குலைத்திடுமா?

ஏகாதி பத்திய இமய மலைகளும்
இடிந்து விழுந்திடும் நேரமடா! இனி
இணைந்து போரிடும் மக்கள் சக்தியை
எந்தச் சக்திதான் வெல்லுமடா?



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்